
கமலை வாசகம்

ஐந்தாம் வகுப்பு



...ங்கா பதிப்பகம்,
.... திருவாரூர், ஜங்.

கமல வாசகம்

ஐந்தாம் புத்தகம்

ஆசிரியர்

வித்துவான் ரா. விசுவநாதன் எம்.ஏ., பி.ஓ.எல்.,
(முன்பு) சென்னை, பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பேராசிரியர்

&

பண்டிதர் செ. முத்துரத்ன முதலியார்,
(முன்பு) திருவாரூர், அரசியல் உயர்தரக் கலாசாலைத்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்.

V.P.H
R.T.N
VIJAYAPURAM ★ TIRUVARUR

விவேகானந்தா பதிப்பகம்

விஜயபுரம் : : திருவாரூர் ஜங்.

பதிப்புரிமை] 1955 [விலை 9 அணா

முதற் பதிப்பு 1951.
இரண்டாம் பதிப்பு 1952.
மூன்றாம் பதிப்பு 1955.

Approved by the Text Book Committee, Madras
Vide Fort. St., George Gazette Part I-B Page 32
Dated 7th May, 1952.

Printed at the Rajan Electric Press, Madras-1.

முகவுரை

கமல வாசக வரிசையில் ஐந்தாவதாகிய இப்புத்தகம் அவ் வரிசையின் சிகரமாகும். உடல் வளர்ச்சியிலும் உள்ள வளர்ச்சியிலும் ஐந்தாவது வகுப்பு மாணவர்கள் ஒரு பருவ எல்லையைக் கடந்து அடுத்த பருவத்தை எட்ட வல்லவர்களாக ஆகின்றனர். அந்நிலைக்கேற்ப, அவர்களுக்கென எழுதப்பெறும் நூலும் அமைதல் வேண்டும்.

தாமாகவே எளிய இனிய தாய்மொழிப் பாடங்களை மௌனமாக - சிறிதளவேனும் உதடுகளை அசைக்காமல் - படிக்கவும், படிப்பதில் சுவை கொள்ளவும் கூடிய ஒரு நிலையை அவர்கள் இங்கு எய்துகின்றனர். ஆகவே இலக்கியச் செறிவும், உலக அறிவும் பொருந்திய பாடங்களை அவர்கள் படிக்கக் கூடியவர்களாகின்றனர். முன் நான்கு ஆண்டுகளுள் அவர்கள் கையாளத் தெரிந்து கொண்டுள்ள தாய்மொழிச் சொற்கள் ஏறக்குறைய 1900; பாடத் திட்டத்தின்படி அவர்கள் இவ்வாண்டு அறிய வேண்டியவை 800. ஆகவே இப்பருவத்தில் அவர்களின் கைக்கு வரும் தமிழ்ச் சொற்களின் தொகை 2,700.

இலக்கண அறிவிலும் அடிப்படையான பெயர், வினை இவற்றின் தன்மைகள், பாகுபாடுகள், வாக்கிய அமைதிகள், சொல் ஆக்கங்கள், வழக்கச் சொற்கள் இவற்றிலும் அவர்கள் ஒரு நிலையை அடைந்தவர்களாக வேண்டும். தாமாகத் தம் மனோபாவத்தைத் தூண்டி அக உலகத்தையும் புற உலகத்தையும் காணவும், அப்படிக் கண்டவற்றைக் கட்டுரையாக எழுதவும், சமூகக் கடிதங்கள் காரியக் கடிதங்கள் இவற்றின் தன்மைகளை அறியவும், பாரா, புள்ளிகள், குறிகள் முதலிய எழுத்து உதவிகளைக் கையாளவும் அவர்கள் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

இவையே பாடத்திட்டத்தின் குறிக்கோள்கள். இவற்றை உட்கொண்டு இக் குறிக்கோள்கள் நன்கு நிறைவேற வேண்டுமென்ற நோக்குடன் இப்புத்தகம் எழுதப்பெற்றுள்ளது.

இறைவனருள் இதனையும் இதன் முன்னுள்ள நான்கினையும் தமிழகம் நன்கு பயன்படுத்திக்கொள்ள உதவுவதாக.

பிரசுரகர்த்தர்கள்.

பொருளடக்கம்

செய்யுட் பகுதி

1. தஞ்சைப் பெருங்கோயில்

ஒரு நாட்டின் சிறப்பை அந்நாட்டு மக்களின் கலையறிவைக் கொண்டு காணலாம் என்பர். தமிழகம் பண்டைக்காலம் முதற் கொண்டு இலக்கியம், இசை, நாடகம், சிற்பம், ஓவியம் முதலிய பல கலைகளில்



தஞ்சைப் பெருங் கோயில்

ஓங்கி வளர்ந்து வந்திருக்கிறது என்னும் உண்மையை நாம் நம் பழைய நூல்களிலிருந்தும் கட்டடங்களி னின்றும் அறிகிறோம்.

திராவிடர் சிற்பத்துக்குச் சிகரமாக விளங்குவது தஞ்சையிலுள்ள பெருங் கோயிலே யாகும். நாடு இணையற்ற செல்வத்தில் திளைத்து வந்தது என்பதையும், மக்கள் கடவுள் பக்தியிலும் கலையறிவிலும் மிக ஓங்கிய நிலையை எய்தி யிருந்தனர் என்பதையும் காட்டச் சிறந்த அறிகுறியாக அக்கோயில் இன்றும் விளங்கி வருகிறது. ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முன்னே சோழ மன்னர்கள் தஞ்சையிலிருந்து கொண்டு தமிழகத்தை ஆண்டுவந்தார்கள். அவர்களுள் இராசராசன் என்பவனே மிகச் சிறந்தவன். அவன் தமிழகம் முழுமையும் தன்னடிப்படுத்தியதோடு ஈழம், கடாரம் முதலிய வெளிநாடுகளையும் வென்று தன் வெற்றிக் கொடியை நாட்டினன். அவன் எழுப்பிய கோயிலே இன்று இராசராசேசுவரம் என்றும் தஞ்சைப் பெருங் கோயிலென்றும் விளங்கிவருகிறது. அதனை அவன் தன் வெற்றிகளுக்கு அறிகுறியாக எழுப்பினன். எல்லா வழிகளிலும் அது இணையற்ற பெருமையுடன் விளங்க வேண்டுமென்பது அவனது விருப்பம். அவ்விருப்பத்திற் கேற்றபடி அதன் நீளம், அகலம், உயரம் முதலியவற்றை அவன் அமைத்தான்.

தஞ்சை நகரம் இப்பொழுது ஒரு பெரிய புகை வண்டிச் சந்திப்பாக விளங்குகிறது. முப்புறங்களிலிருந்தும் அங்கே புகை வண்டிகள் வந்து சேருகின்றன. நாம் எப்பாகத்திலிருந்து புகைவண்டியிற் சென்றாலும், தஞ்சையை அடைவதற்கு நெடுந் தொலைவிலிருந்தே கோயிலின் விமானத்தைக் காணலாம். அவ்விமானம் கோயிலிலுள்ள கடவுள் திருமேனிக்கு மேலே 216 அடி உயரமுள்ளதாகக் கட்டப்பட்டிருக்கிறது. அது சதுர வடிவாய், பதின்மூன்று கோபுர மாடிகளையுடையதாய்

இருக்கிறது. அதற்குத் தக்ஷிணமேரு என்றும் உத்தம விமானம் என்றும் வேறு பெயர்கள் உண்டு. அதன் உச்சியில் 25½ அடி நீளமும் 25½ அடி அகலமுமுள்ள ஒரு கருங்கல் வைக்கப்பட்டு, அதன்மேலே பொற்ற கட்டால் மூடப்பெற்ற ஒரு கலசமும் அமைக்கப்பட்டி ருக்கிறது. இக்கருங்கல்லை விமானத்தின் மேலேற்றத் தஞ்சைக்கு நாலு கற்களுக்கு அப்பாலுள்ள சாரப் பள்ளம் என்ற இடத்திலிருந்து சாரம் கட்டினார்கள் என்பர். தமிழர்களின் மன எழுச்சியின் உயர்வை எடுத்துக் காட்டுவதுபோல் அவ்விமானம் தோன்று கிறது என்னலாம். விமானத்தின் உயர்வுக்கு ஏற்றபடி அக்கோயிலின் பிற பகுதிகளும் அமைந்திருக்கக் காண் கிறோம். இக்கோயிலைச் சூழ்ந்து ஓர் அகழியும் இருக் கின்றது. கோயிலுக்குள் நுழைய இரண்டு பெரிய கோபுர வாயிலுள்ளும் நாம் நுழையவேண்டும். இரண்டாம் கோபுர வாயிலைக் கடந்தவுடன் நாம் மிகப் பெரியதொரு முற்றத்திற்கு வருவோம். அதன் நீளம் 800 அடி; அகலம் 400 அடி. அம்முற்றத்தில் பெரிய தொரு மண்டபத்தில் மிகப் பெரியதொரு நந்தி படுத் திருப்பதைக் காணலாம். இதன் உருவத்தை யொத்த வேறொரு நந்தி தமிழகத்தில் வேறெங்கும் இல்லை என்பர்.

நந்தியின் எதிரில்தான் இறைவர் எழுந்தருளி யுள்ள விமானம் உள்ளது. அந்த விமானத்துக்கும் நந்திக்கும் இடையில் ஆறு பெரிய மண்டபங்கள் இருக்கின்றன. கடவுளைக் காண நாம் ஏழு வாயில் களைக் கடக்கவேண்டும். ஒவ்வொரு வாயிலிலும் 18 அடி உயரமும் 8 அடி அகலமுமுள்ள இரண் டிரண்டு தெய்வக் காவலாளிகளின் உருவங்கள்

வைக்கப் பெற்றுள்ளன. இறைவன் திருமேனியும் மிகப் பெரியது.

இக்கோயிலின் சிற்ப வேலைகளைப்பற்றி எவ்வளவோ பெயர்கள் புகழ்ந்து எழுதியிருக்கிறார்கள். இக்கோயிலில் காணப்பெறும் ஓவியங்களின் அழகைக் கண்டும் பலர் வியந்து கூறியிருக்கிறார்கள்.

இம்மாதிரியான கோயில்கள் நம் நாட்டில் அளவற்று விளங்குகின்றன. அவை நம் முன்னோர் நமக்கு விட்டுவைத்த விலைமதித்தற்கு அரிய அரும் செல்வங்கள். அவற்றைப் பற்றி அறிவதால் நாம் நம் நாட்டின் பண்டைப் பெருமைகளை அறிகிறோம்.

பயிற்சி:

சொற்கள்

கலை	**சிற்பம்**	**எய்தி**	**கோபுரம்**	**திருமேனி**
தமிழகம்	**ஓவியம்**	**சந்திப்பு**	**முற்றம்**	**காவலாளி**
இலக்கியம்	**சிகரம்**	**விமானம்**	**மண்டபம்**	**தனம்**
இசை	**இணை**	**கோட்டை**	**நந்தி**	**பண்டை**
நாடகம்	**திளைத்து**	**அகழி**	**இறைவர்**	**எழுச்சி**

2. கலையறிவு, பண்டைக்காலம், இணையற்ற, அறிகுறி, ஏறக்குறைய, அடிப்படுத்துதல், வெற்றிக்கொடி, மதிப்பதற்கரிய, மன எழுச்சி.

3. சில பெயர்ச் சொற்கள் வினைச் சொல் அடிகளிலிருந்து பிறக்கின்றன. (உ - ம்) அறிவு - அறி.

பின்வரும் பெயர்கள் பிறந்துள்ள வினை அடிகளைக் கூறுக.

கல்வி, வெற்றி, எழுச்சி, நிலை.

வினாக்கள்

1. சில நுண்கலைகளின் பெயர்களைக் கூறுக.

2. நம் கோயில்கள் நமக்குத் தெரிவிக்கும் பண்டைப் பெருமைகள் யாவை ?

3. இராஜராஜன் தஞ்சைக் கோயிலை எதற்கு அறிகுறியாகக் கட்டினான் ?

4. கோயிலின் விமானத்தைப் பற்றி ஒரு சிறிய விளக்கம் கூறு.

5. சாரப்பள்ளம் என்ற பெயர் எதனால் உண்டாயிற்று ?

6. தஞ்சைக் கோயிலில் காணக்கூடியவை யாவை ?

இலக்கணம்

பின்வரும் வாக்கியங்களை ஒன்றுபடுத்தி எழுதுக :

1. சோழமன்னர்கள் தமிழகத்தை ஆண்டுவந்தனர்; அவர்கள் தஞ்சையிலிருந்து ஆண்டுவந்தனர்.

2. விமானம் கடவுள் திருமேனிக்கு மேலே கட்டப்பட்டிருக்கிறது. அதன் உயரம் 216 அடி.

3. சாரப்பள்ளத்திலிருந்து சாரம் கட்டினார்கள். அவ்வூர் தஞ்சையிலிருந்து நாலு கல் தூரத்தில் உள்ளது.

புள்ளிகள் :— முற்றுப்புள்ளி, காற்புள்ளி இவற்றின் உபயோகத்தைப்பற்றி முன் புத்தகத்தில் படித்தீர்கள்.

பின்வரும் வாக்கியத்தைப் பாருங்கள்.

முற்றத்தின் நீளம் 800 அடி; அகலம் 400 அடி.

இவை இரண்டு வாக்கியங்கள்; ஆனால் அவை ஒன்றியும் இருக்கின்றன. அவற்றின் இடையே; **அரைப்புள்ளி** இடப்பட்டிருக்கிறது.

கட்டுரை

நீங்கள் பார்த்த ஏதேனுமொரு பெரிய கோயிலைப் பற்றிச் சில வாக்கியங்களிற் கூறு.

2. மணிமேகலை

மணிமேகலை புகார் நகரத்தில் வாழ்ந்த கோவலன் என்ற வணிகனுக்கும் மாதவி என்ற நாடகக் கணிகைக்கும் தோன்றிய பெண். அவள் ஆடல், அழகு, கல்வி என்ற மூன்றிலும் மிகச் சிறப்பு வாய்ந்து விளங்கினாள். ஆனால், அவள் தந்தை திடீரென மதுரையிலே மாண்டு போனதைக் கேட்டு அவளும் அவள் தாயும் ஆற்ற முடியாத துயரத்திலாழ்ந்தனர். மாதவி துறவு பூண்டாள்.

இவ்வாறிருந்தபோது, ஒரு நாள் மணிமேகலை மலர்வனம் புகுந்து மலர் கொய்யச் சென்றாள். அங்கே மணிமேகலா தெய்வம் என்ற ஒன்று தோன்றி அவளைத் தூக்கிக்கொண்டு மணிபல்லவத் தீவில் கொண்டு சென்று அங்கே அவளை விடுத்தது. அத்தீவில் மணிமேகலைக்கு முன் பிறப்பு உணர்ச்சியும், சில மந்திரங்களும் அங்கிருந்த ஒரு தெய்வத்தின் உதவியால் கிடைக்கலாயின. அவள் வேற்று வடிவம் கொள்ளவும் ஆகாயத்தின் வழியே செல்லவும் அம்மந்திரங்கள் உதவின. இன்னும் அத்தீவில் எடுக்க எடுக்கக் குறையாததான ஒரு பாத்திரமும் கிடைத்தது. அதன் பெயர் அமுத சுரபி.

அப்பாத்திரத்துடன் அவள் ஆகாய வழியாகத் திரும்பிப் புகார் நகரை அடைந்தனள். அங்கே அவள் துறவிக் கோலத்துடன் பாத்திரமும் கையுமாக நின்றதைக் கண்டு ஊரார் வியந்தனர். அவ்வூரிலே உலக வறவி என்ற ஓரிடம் உண்டு. அங்கே அங்கம் குறைந்தவர், பிணியாளர், வறியோர் ஆகிய ஏழையர் பலர்

இருந்தனர். மணிமேகலை அங்குச் சென்று அவர்களுக்குத் தன் பாத்திரத்திலிருந்து சோற்றை எடுத்து எடுத்து ஊட்டி அவ்விடத்தை அறச்சாலையாக்கினாள்.



நெடுநாளாகக் கொடிய வெயிலால் முற்றிலும் எரிந்து போன ஒரு காட்டில் திடீரெனச் சோனாமாரி பெய்து அவ்விடத்தை யெல்லாம் குளிர்ப்பித்தது போல விருந்தது உலக வறவியில் அவளுடைய தோற்றம். அங்கிருந்த மக்கள் யாவரும் ஆர உண்டு பசி தீர்ந்திருந்தார்கள். இக்காலத்தில் அறவண வடிகள் என்ற ஒரு பௌத்தப் பெரியாரின் தொடர்பும் அவளுக்குக் கிடைத்தது. அவர் புத்தர் பெருமானின் நல்லுரைகளை யெல்லாம் அவளுக்குக் கற்பித்தார்.

இவ்வாறு மணிமேகலை சமயத்தொண்டு புரிந்து கொண்டு வாழ்ந்து வந்த காலத்தில் அந்நகரத்து அரசனின் மகன், உதயகுமாரன் என்பவன், மணிமேகலையைக் காதலிக்கத் தொடங்கினான். மணிமேகலை

அவனுக்கு இணங்கவில்லை. தற்செயலாய் ஒருநாள் யாரோ ஒரு தேவன் உதயகுமாரனை வெட்டிக்கொல்ல, அரசன் தன் மகனின் சாவுக்கு மணிமேகலையே காரணம் என்றெண்ணி அவளைச் சிறையிலிட்டான். அரசன் மனைவி மணிமேகலையைப் பல வழிகளிலும் துன்புறுத்த முயன்றாள். ஆனால் அவளால் ஒன்றும் இயலவில்லை. பிறகு அவள் மணிமேகலையின் தூய்மையையும், ஆற்றலையும் உணர்ந்து தான் அவளுக்குச் செய்த துன்பத்திற்காக வருந்தி அவளைச் சிறையிலிருந்து விடுவித்து அவளுடைய மன்னிப்பையும் வேண்டினாள்.

மணிமேகலை அவளுக்கு நல்லறிவு உண்டாகுமாறு உபதேசம் செய்து, அவ்வூரை விட்டுக் கிளம்பிப் பல விடங்களுக்கும் சென்று ஏழை மக்களுக்குச் சோறளித்து உதவியும், அறிவுடையோர்களைக் கண்டால் அவர்களிடமிருந்து அறிவு பெற்றும், சிலரோடு வாதம் புரிந்து தன் மதக் கொள்கைகளை நாட்டியும் வந்தாள். முடிவில் அவள் அறவணவடிகளையே அடைந்து புத்த மதக் கொள்கைகளை ஐயந்திரிபற அறிந்து தவம் புரியலானாள்.

இக்கதையை மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் என்ற கவிஞர் தமிழில் மிக அழகான காப்பியமாக எழுதியுள்ளார். தமிழிலுள்ள பெருங்காப்பிய நூல்களுள் ஒன்றாக அது திகழ்ந்து வருகிறது. அதனில் மணிமேகலையின் வரலாறு மிக விரிவாக எழுதப்பட்டுள்ளது. நீங்கள் பெரியவர்களாகும்போது அச்சிறந்த நூலைப் படித்துப் பயன் பெறவேண்டும்.

பயிற்சி :

வணிகன்	விடுத்தது	ஆர	தூய்மை	காப்பியம்
கணிகை	மந்திரம்	பௌத்த	ஆற்றல்	திகழ்ந்து
ஆடல்	துறவி	சமயம்	உபதேசம்	அங்கம்
மாண்டு	கோலம்	காதலிக்க	வாதம்	விரிவாக
தீவு	வியந்தனர்	இணங்க	கவிஞர்	

ஆற்றமுடியாத	முன் பிறப்பு	உலகவறவி	சோழநாடு
மலர்வனம்	எடுக்க எடுக்க	அறச்சாலை	பசிதீர்ந்து
நல்லுரை	தற்செயலாய்	மதக்கொள்கை	
சமயத்தொண்டு	நல்லறிவு	ஐயந்திரிபற	

சில பெயர்ச் சொற்கள் வினையடிகளிலிருந்து பிறக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். பின்வரும் சொற்கள் எவற்றிலிருந்து பிறந்திருக்கும் ?

உணவு, அறிவு, சாவு, மன்னிப்பு.

வினாக்கள்

1. கோவலன் இறந்ததால் மாதவி செய்தது என்ன ?
2. மலர்வனத்தில் மணிமேகலைக்கு என்ன நிகழ்ந்தது ?
3. அமுத சுரபியின் இயல்பு யாது ?
4. உலகவறவியில் இருந்தோர் எத்தகையவர் ?
5. அவர்களுக்கு மணிமேகலை செய்த உதவி யாது ?
6. அறவணவடிகள் என்பவர் யார் ?
7. உதயகுமாரன் எப்படி இறந்தான் ?
8. மணிமேகலை சிறையிலிருந்து எப்படி வெளியேறினாள் ?
9. மணிமேகலை நூலை எழுதியவர் யார் ?

இலக்கணம்

பின்வரும் நீண்ட வாக்கியங்களைச் சிறிய வாக்கியங்களாகப் பிரிக்க.

1. அங்கே மணிமேகலா தெய்வம் என்ற ஒன்று தோன்றி அவளைத் தூக்கிக்கொண்டு மணி பல்லவத் தீவில் கொண்டு சென்று அங்கே அவளை விடுத்தது.

2. அப்பாத்திரத்துடன் அவள் ஆகாய வழியாகத் திரும்பிப் புகார் நகரை அடைந்தாள்.

கட்டுரை

மணிமேகலை மலர்வனம் புகுந்தது முதல் அமுத சுரபியுடன் திரும்பியது வரையில் நடந்தவை என்ன ?

3. மாயக் குழலோன்

ஜர்மனி நாட்டில் ஆமலன் என்ற நகரொன்றிருக்கிறது. அதன் ஓரமாக வீஸர் என்ற ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது. வெகு காலத்துக்கு முன்னே அந்நகரில் எலிகள் அதிகமாக நகர மக்களை அலைத்துக் கொண்டிருந்தன. அவை இல்லா இடங்களே இல்லை. அவற்றிற்குப் பகலென்றும் இரவென்றும் வேற்றுமை இல்லை. ஒவ்வொரு வீட்டிலும் அவை நூற்றுக் கணக்கில், ஆயிரக்கணக்கில் இருந்தால் யாரால் என்ன செய்யமுடியும்? பூனைகளெல்லாம் அவற்றைக் கண்டு அஞ்சின.

மக்கள் ஆனமட்டும் அவற்றை வேட்டையாடப் பார்த்தனர். அவர்களால் ஒன்றும் செய்ய இயல வில்லை. அவர்கள் ஒருநாள் ஒன்றுகூடி அத் தொல்லையை எவ்வாறு தொலைப்பதென்று ஆராயத் தொடங்கினார்கள்.

அச்சமயம் அங்கே ஒரு புதியோன் புகுந்தான். அவன் விந்தையான உடைதரித்திருந்தான். அவன் கைவிரல்கள் எப்போதும் புல்லாங்குழல் வாசிப்பன போல அசைந்து கொண்டிருந்தன. அவன் நெட்டையா யிருந்தான்; ஆனால் அவனுடல் மெலிந்திருந்தது. அவன் கண்கள் ஒளிவீசின.

அவன் அவையோர்களை வணங்கி, "ஐயன்மீர், நான் ஒரு மாயக் குழலோன்; என் குழலின் வாசிப்பைக் கொண்டு உலகத்திலுள்ள எந்த உயிர்ப் பிராணியையும்

என் வசப்படுத்திவிடுவேன். சென்ற ஆண்டு அரேபியா நாட்டுக்குச் சென்று அங்குள்ள பாம்புகளையெல்லாம் ஒழித்தேன்; இரண்டு தினங்களுக்குமுன் ஆப்பிரிக்கா போய் அங்குள்ள வௌவால்களை யெல்லாம் வெருட்டினேன். எனக்கு ரூபா ஆயிரம் கொடுப்பீர்களானால் இக்கணமே இந்நகரிலுள்ள எலிகள் யாவற்றையும் இல்லாமற் செய்து விடுவேன்" என்றான்.

அச்சொற்களைக் கேட்ட அனைவரும், "ஆயிரம் என்ன? ஐயாயிரம் தருகிறோம்; எப்படியாவது இவ் வெலிகளைத் தொலைத்துவிடு" என்றார்கள்.



உடனே அக்குழலோன் தெருவில் வந்து, தன் மார்பில் தொங்கிக் கொண்டிருந்த குழலை யெடுத்து வாசிக்கத் தொடங்கினான். அவ்வொலி புறப்பட்டது தான் தாமதம். ஒவ்வொரு வீட்டிலிருந்தும் கடையிலிருந்தும், களஞ்சியத்திலிருந்தும், பண்ட சாலையிலிருந்

தும் எலிகள் குதித்துக்கொண்டு வெளியே வந்தன. அப்பப்பா! எத்தனை எலிகள்! அவற்றில் எத்தனை விதங்கள்! வெள்ளை எலி, கருப்பு எலி; சாம்பல் நிற எலி; பெரிய மீசைக்கார எலி; பெரிய தாடிக்கார எலி; பருத்த எலி; இளைத்த எலி; தாத்தா எலி; பாட்டி எலி; அத்தான் எலி; அம்மான் சேய் எலி; தாய் எலி; தகப்பன் எலி; குழந்தை எலி; பாட்டன் எலி; பாட்டி எலி; பேரன் எலி; பேத்தி எலி; எல்லாம் வாலைத் தூக்கிக்கொண்டும், குதித்துக்கொண்டும், கொம்மாள மிட்டுக்கொண்டும் குழலோன் பின்னே சென்றன.

அவன் வீதி வீதியாய்ச் சென்றான். அந்நகர எலிகள் யாவும் தெருக்களில் நிற்க இடமில்லாமல் ஒரு கல் தூர நீளம் ஊர்வலமாகச் சென்றன. அவன் அவற்றையெல்லாம் அழைத்துக்கொண்டு ஆற்றை நோக்கிக் கடந்தான். ஆற்றோரம் வந்ததும் அவை யாவும் தண்ணீரில் குதித்து விட்டன. ஆறு அவை யாவற்றையும் அடித்துக்கொண்டு போய்விட்டது.

மக்களுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவர்கள் எல்லோரும் எலி வளைகள் யாவற்றையும் தூர்க்கலாயினர். தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்க வீடுதோறும் தோரணம் கட்டினர். ஆனால் ஒருவரும் குழலோனைக் கவனிக்கவில்லை.

அவன் எலிகளையெல்லாம் கொன்றுவிட்டு நகருக்குள் வந்தான். அவனுக்கு ஒருவரேனும் ஒரு நன்றிச் சொல் சொல்லக்கூட வரவில்லை. அவன் நகரத் தலைவரிடம் நேரிற்சென்று, "என் கூலி ஆயிரம் ரூபாயையும் என்னிடம் கொடுங்கள்" என்று கேட்டான். அதற்கு

அவர், "ஆயிரம் ரூபாவா ? எலிகளைக் கொல்ல ஆயிரம் ரூபாவா ? வேண்டுமானால் ஐந்து ரூபா கொடுப்போம். வாங்கிக் கொண்டுபோம்" என்றார்.

குழலோன், "ஐயா, என்னுடன் விளையாட வேண்டா. எனக்கு உம்முடன் பேச நேரமில்லை; பேசினபடி ஆயிரம் ரூபாவைக் கீழே வையுங்கள்" என்றான்.

அதற்கு நகரத் தலைவர், "எலிகளெல்லாம் இறந்து விட்டன. இனி உம்மால் என்ன செய்யமுடியும் ? நான் பணம் கொடுக்க மாட்டேன்" என்றார்.

குழலோன் வாய் திறக்கவில்லை. வீதியில் வந்தான். தன் கைக்குழலை எடுத்து ஊதினான். ஊரிலுள்ள குழந்தைகளெல்லாம் அவன் பின்னே புறப்பட்டன. ஊரார், என்ன கெஞ்சியும் அக்குழந்தைகள் கேட்க வில்லை. குழலோன் அக்குழந்தைகளுடன் தன் பாட்டுக்குப் போய்விட்டான்.

நகரத்தார் யாவரும் தாம் செய்த குற்றத்தை எண்ணி வருந்தினர்கள். வருத்தி யாது பயன் ?

பயிற்சி :

சொற்கள்

அலைந்து	**ஆராய**	**வெருட்டு**	**அம்மான்சேய்**
நெட்டை	**வேட்டை**	**மாயம்**	**அனைவர்**
பேரன்	**விதம்**	**இயல**	**வசப்படுத்தி**
களஞ்சியம்	**பேத்தி**	**கொம்மாளம்**	**தொலைப்பது**
ஒழி	**இனை**	**நன்றி**	**தோரணம்**
	நூற்றுக்கணக்கு	**ஆற்றோரம்**	**கொம்மாளமிடு**

இரு பொருள்கள் கூறுக :

எண், கூடு, ஆண்டு, கவம், திங்கள், ஊது, நாடு.

வினாக்கள்

1. குழலோன் உடையும் தோற்றமும் எவ்வாறு இருந்தன ?
2. அவன் வெவ்வேறு இடங்களில் செய்த பெருஞ் செயல்கள் யாவை ?
3. எலிகளின் வகைகளை யெல்லாங் கூறு.
4. எலிகளெல்லாம் எவ்வாறு அழிந்தன ?
5. எலிகள் ஒழிந்தபின் ஊரார் செய்தவை யாவை?
6. குழலோனுக்குக் கோபம் வந்ததேன் ?
7. அவன் குழந்தைகளை யாது செய்தான் ?

இலக்கணம்

இப்பாடத்திற்குப் பின்வரும் தலைப்புக்களை உரிய இடங்களில் இட்டுக் காட்டு.

(1) எலித்தொல்லை. (2) குழலோன் கூறிய உதவி. (3) எலிகள் நாசம். (4) குழலோன் ஏமாற்றப்பட்டது. (5) பழிக்குப் பழி.

கட்டுரை

குழலோன் பாம்புகளைத் தொலைத்தான் என்று கதையை மாற்றிக்கொண்டு, பாம்புகள் புறப்பட்ட தோற்றத்தை விளக்கு.

4. நாடும் அரசியலும்

கல்வியிற் பெரியவர் கம்பர் என்பது ஒரு பழமொழி. அத்தகைய பெருமை வாய்ந்த கம்பர் தமிழில் ஓர் இராமாயணம் பாடினூர். அது உலகப் பெரு நூல்களுள் ஒன்ருக இன்று விளங்கி வருகிறது.

கம்பராமாயண முகப்பிலே கவிஞர் தம் கதாநாயகனுன இராமன் தோன்றிய நாடான கோசலை நாட்டின் வளத்தையும் அதன் தலைநகரான அயோத்தியின் பெருமையையும் அங்கே ஆண்டு வந்த தசரதனின் அரசியல் சிறப்பையும் 145 செய்யுட்களுள் பாடியுள்ளார். கம்பர் காவிரி நாட்டிற் பிறந்து வளர்ந்தவர்; தமிழகத்தில் இணையிலாப் பற்றுக்கொண்டவர். அவர் தம்முடைய நாட்டின் வளத்தையும் அதன்மீது தாம் கொண்ட பற்றையுமே தம் நூலில் அமைத்துள்ளார் என்று அறிந்தோர் கூறுகின்றனர். அன்றியும் அவர் கருத்துப்படி சிறந்த நாடென்பது எவ்வாறிருக்க வேண்டுமென்றும் அதன் அரசியல் எவ்வாறு அமைய வேண்டுமென்றும் அவர் தம் மனக் கண்ணுல் கண்டு, அவற்றையே கம்ப இராமாயணத்தில் வரைந்துள்ளார் என்றும் சிலர் கூறுவதுண்டு. உண்மை எதுவானுலும் அவருடைய கருத்துக்களை நாம் அறிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது. அதனிலுள்ள சில பகுதிகளை இங்கே கூறுவோம்.

நாட்டின் சிறப்பு முதன்மையாக அதன் மக்களால் அமைகிறது. கம்பருடைய நாட்டில் கள்வரே இல்லை; ஆதலால் அங்குக் காவலுக்குத் தேவையே இல்லை.

அந்நாட்டில் வறியோரே யில்லாமையால் அங்கே கொடைக்கும் வழியில்லை. எல்லோரும் படித்திருந் தனர் ; ஆகவே முற்றிலும் கற்றவர் என்று எவரையும் குறித்துச் சொல்ல இயலவில்லை. எல்லாரிடமும் செல் வம் நிறைந்திருந்தது ; ஆகவே, அங்கு இல்லாரும் இல்லை. உடையவரும் இல்லை. இவ்விதம் நாடு கல்வி, செல்வம் இவற்றில் நிரம்பியிருந்தது. மக்கள் கேள்வி களிற் சிறந்திருந்தமையால் அவர்களுடைய மனம் நல் வழிகளிலேயே சென்றிருந்தது. அவர்கள் தம் வாழ் வால் பெறும் நன்மைகள் யாவற்றையும் இனிதே நுகர்ந்து வந்தனர்.

இனி நாட்டின் வளங்களைக் காண்போம். சரயு நதி தன் ஆயிரங் கிளைகளோடு நாடெல்லாம் பாய்ந்து வந்தது. தண்ணீர்ப் பஞ்சம் எங்குமே யில்லை. நில வளமும் மக்கள் உழைப்பும் செழித்தோங்கி வந்தன. ஆண்களும் பெண்களும் ஓயாமல் உழைத்து வந்தனர். இவற்றின் விளைவாக நாட்டின் விளைபொருள்கள் மல்கின.

சோலைகளில் மயில்கள் ஆடின; தாமரைகள் விளக் குகள் எரிவனபோல விளங்கின ; வானம் மத்தளம் கொட்டுகிறது என்னும்படி குமுறிக்கொண்டு மாதம் மும்மாரி பொழிந்தது. குவளைப் பூக்கள் நீர் நிலை களிலே நின்று பெண்களின் கண்களோ என்னும்படி மலர்ந்தன. கடலின் அலைகள் ஒருபுறத்தில் எழுந்து மடங்கும் தோற்றம் நாடக மேடையில் ஏறி இறங்கும் திரைகள் போல விளங்கின. மரங்களிலும் செடிகளி லும் கொடிகளிலும் பூக்களை நுகர்ந்து திரியும் வண்டி னங்கள் யாழ்போல் பாடின.

வயல்களில் உழவர்கள் நெற்கதிர்களைப் போர் போராகக் குவித்தனர். இடையர் மாட்டு வளம் பெருகப் பாலும் தயிரும் விற்றுப் பெரும் செல்வம் படைத்தனர். நுளையரும் நுளைச்சியரும் மீன் பிடித்தும், முத்துக் குளித்தும், உப்புக் காய்ச்சியும் உலகுக்கு அளித்து வந்தனர்.

வீடுதோறும் பெண்டிர் தம் கூந்தலைப் புலர ஊட்டும் அகிற் புகையும், ஆலைகளில் வெல்லங் காய்ச்சுவதால் எழும் புகையும் மறையோர் வேள்விகளில் எழுப்பும் புகையும் மேகங்கள் போல வானத்தில் பறந்தன.

கப்பல்களிலும் வண்டிகளிலும் சரக்குகள் வந்து கொண்டும் போய்க் கொண்டுமே இருந்தன. மக்கள் செல்வக் களிப்பால் பலவகை மகிழ்ச்சிகளில் இறங்கினர். ஆடல்களும் பாடல்களும் எங்கும் மலிந்தன. வீடுகளில் குழந்தை குட்டிகள் பெருகின.

இத்தகைய நாட்டைத் தயரதன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் நிரம்பக் கற்றிருந்தான்; அதனோடு தான் கற்ற வழியே நின்றும் வந்தான். அவன் மக்களிடம் தாய்போன்ற அன்பு கொண்டிருந்தான்; மக்களுக்கு வேண்டிய நன்மைகளை யெல்லாம் ஆராய்ந்து அவர்களுக்கு அளிப்பதிலேயே அவன் முனைந்திருந்தான். அவர்களுக்கு உண்டாகும் தீமைகளை முன்பே உணர்ந்தறிந்து அவற்றை வராமல் தடுத்து வந்தான்.

அவனுடைய வீரத்துக்கு எல்லையில்லை. அவன் தன் ஆண்மையால் உலகத்தையே தன் அடிப்படுத்தி ஆண்டு வந்தான். அவனுடைய அமைச்சர்கள் அவ

னுக்குக் கண்கள் போலிருந்து வருங் காரியங்களை ஆராய்ந்து அவனுக்குதவி வந்தனர்.

இத்தகைய நாட்டிலே இத்தகைய மன்னனுக்கு ஸ்ரீராமன் புதல்வனுகத் தோன்றினன். அவனுடைய வரலாற்றைக் கூறுவதே இராமாயணம்.

பயிற்சி :

சொற்கள்

பழமொழி	**அரசியல்**	**கொடை**	**நுளையர்**	**முனைந்திருந்தான்**
முகப்பு	**வரை**	**நுகர்ந்து**	**நுளைச்சியர்**	**ஆண்மை**
வளம்	**பகுதி**	**குமுறு**	**கூந்தல்**	**அடிப்படுத்தி**
பற்று	**வறியோர்**	**யாழ்**	**புலர**	**வரலாறு**
கதாநாயகன்	**மனக்கண்**	**கல்விகேள்வி**	**செழித்தோங்கி**	
இணையிலா	**இன்றியமையாதது**	**நல்வழி**	**நாடகமேடை**	

ஆடு, பாடு, உணர், தோன்று.— இவ்வினையடிகளி லிருந்து பெயர்ச்சொற்கள் உண்டாக்குக.

இலக்கணம்

பின்வரும் வாக்கியங்களைப் பன்மையில் அமைக்க.

அவன் படித்திருந்தான்.
வண்டியில் சரக்கு வந்தது.
நான் நூல் படிக்கிறேன்.

கட்டுரை

சோழநாட்டின் வயல்வள இயற்கைக் காட்சியை வர்ணித்தெழுது.

5. முருகன் கணபதி விளையாட்டு

சிவப்பிரகாசர் என்ற கவிஞர் தம் உடன் பிறந்தார் திருமணக் காலத்திலே சில பாடல்களைப் பாடினர். அவற்றிலொன்று கீழே வருவது. இப்பாடலில் மூத்த பிள்ளையாரும், முருகனும் குறும்பு விளையாடல்கள் புரிவதைப் புலவர் சித்திரிக்கிருர் :

அரனவ னிடத்திலே ஐங்கரன் வந்துதான்,
 ' ஐய ! என் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினன் ' என்றே சிணுங்கிடவும்,
 அத்தன் வேலவனை நோக்கி,

விரைவுடன் வினவவே, 'அண்ணன் என் சென்னியில்
 விளங்குகண் எண்ணினன்' என,
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து, 'நீ அங்ஙனம்
 விகடம் ஏன் செய்தாய்?'' என,

'மருவும் என் கைந்நீளமுழம் அளந் தான்' என்ன,
 மயிலவன் நகைத்து நிற்க,
மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கி, "நின்
 மைந்தரைப் பாராய்'' எனக்

கருதரிய கடலாடை உலகுபல அண்டம்
 கருப் பெரு தீன்ற கன்னி
கணபதியை அருகழைத் தகமகிழ்வு கொண்டவள்
 களிப்புடன் உமைக்காக்கவே.

குறிப்புரை

அரனவன் இடத்திலே - சிவபெருமானிடத்திலே. ஐங்கரன்-ஐந்து கைகளையுடைய விநாயகன். அறுமுகன்-முருகன். சிணுங்கிடவும்-முகத்தைச் சுளிக்கவும். அத்தன்-சிவபிரான். வேலவனை - முருகனை. சென்னி - தலை. விகடம் - வேடிக்கை. மருவும்-பொருந்திய. மயிலவன்-முருகன். மலை அரையன் உதவ வரும் உமை - மலை அரசனான பர்வதராசன் பெற்ற உமாதேவி. கருத அரிய கடல் ஆடை உலகு பல அண்டம் கரு பெறாது ஈன்ற கன்னி-நினைக்க முடியாத (பெரிய) பெரிய கடலை ஆடையாகக் கொண்ட நிலவுலகையும் பல அண்டங்களையும் கருவிலே கொள்ளாமல் பெற்ற பெண்ணான அம்பிகை.

உமை - மணமக்களை.

6. கடமையின் பெருமை

முன்னொரு காலத்தில் இளந்துறவி யொருவர் கானகத்துக்குச் சென்று தவம் செய்யத் துடங்கினர். அவர் அங்கே மானிடப் பிறப்பின் நுட்பங்களை ஆராய்ந்து கொண்டும், கடவுளைப் பற்றி நினைத்துக் கொண்டும், யோகமுறைகளைப் பயின்று கொண்டும் வந்தார். இவ்வாறு பன்னிரண்டாண்டுகள் கடந்தன.

இவ்வாறு அவர் உட்கார்ந்திருந்த போது அவர் தம் தலைமேல் பல சருகுகளும் இலைகளும் உதிர்வதைக் கண்டார். அவர் அதன் காரணத்தை ஆராய்வதற்காகத் தம் தலையை உயர நிமிர்த்திப் பார்த்தார். அங்கே ஒரு கொக்கும் காகமும் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அவற்றைப் பார்த்தவுடன் அவருக்குக் கோபம் மூண்டெழுந்தது. அவர் அவற்றைப் பார்த்து, "அற்பப் பறவைகளே! என் தலைமீது இவ்வளவு இலைகளை உதிர்க்க உங்களுக்கு இவ்வளவு ஆணவமா?" என்று வினவினர். அப்பொழுது அவர் கண்களினின்று நெருப்பு எழுந்தது. அதன் வேகத்தால் அவ்விரு எளிய பறவைகளும் சாம்பராகி உதிர்ந்தன.

அதனைக் கண்டவுடன் துறவிக்கு வியப்பும் மகிழ்ச்சியும் உண்டாயின. தமக்கு உண்டாகிய புதிய ஆற்றலைக் கண்டு அவர் பெருமிதம் கொண்டார். அப்பொழுது அவருக்குப் பசி தோன்றிற்று. அருகிலுள்ள ஓர் ஊருக்குச்சென்று எவரிடமேனும் சிறிதளவு சோறு இரக்க எண்ணி அவர் அவ்வாறே சென்றார்.

அவர் ஒரு வீட்டின் வாயிலில் நின்று, "தாயே! பிச்சை!" என்றார். உள்ளிருந்து ஒரு குரல், "சற்றுப் பொறும்; வருகிறேன்." என்று வந்தது. கணங்கள் பல கடந்தன. ஒருவரும் வெளியே வந்தபாடில்லை.



துறவிக்கு எழுந்தது கோபம். அவர் உரத்த குரலில், "வாயிலில் நிற்பவன் யாரென்று நினைத்தாய்! பிச்சை போடுகிறாயா? இல்லையா?" என்று வினவினார்.

உள்ளிருந்து முன் வந்த குரல், "கொக்கெனவே எண்ணி னையோ? கொங்கணவா? பதட்டம் வேண்டா. வந்து கொண்டிருக்கிறேன்" என்று வந்தது. உடனே வயது முதிர்ந்த ஓர் அம்மையார் கைகளில் இன்னடிசில் களுடன் வெளியே வந்தார்.

அவரைக் கண்டதும் துறவிக்கு மெய் நடுக்கம் உண்டாயிற்று. அவர் அம்மையின் அடிகளில் விழுந்து, "அம்மையே! அறியாமற் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டுகிறேன்; எளியேன் காட்டில் நிகழ்த்திய செய்தியைத் தாங்கள்தெரிந்துகொண்டது எவ்வாறோ?" என்று வினவினர்.

அதற்கு அவ்வம்மை, "நான் தவம் முதலிய தொன்றையும் அறியேன். வயது முதிர்ந்தவரும் நோயாளியுமான என் கணவர்க்குத் தொண்டு புரிவதும் வீட்டுக் கடமைகளைக் கவனிப்பதுமே நான் அறிந்தவை. என் கடமைகளை, நான் சற்றும் பிசகாமல் செய்து வருவதால், பிறர் மனத்துள் உள்ளவற்றை அறியும் ஆற்றல் பெற்றிருக்கிறேன்" என்றாள்.

துறவி அவள் கொடுத்த உணவை ஏற்றுக் கொண்டு, "எனக்கு நல்லறிவு உண்டாகுமாறு உபதே சிக்க வேண்டுகிறேன்" என்று கேட்க, அவள், "ஐயா, அவ்வளவு அறிவு படைத்தவள் நான் அல்லள்; வேண்டு மானால் இவ்விடத்திலிருந்து இரண்டு நாழிகை அளவி லுள்ள நகரில் உள்ள ஆலமரத்தடிக் கசாப்புக் கடைக் காரரைப் போய்ப் பாரும்" என்றாள்.

அச்சொற்களைக் கேட்டு மேலும் வியந்த துறவி அவள் குறித்த நகருக்குச் சென்றார். அங்கே ஆலமர

மொன்றின் கீழ் அருவருக்கத் தக்க நிலையில் நிணவாணி கம் செய்து கொண்டிருந்த ஒருவரிடம் போனார். அவ் வணிகர் துறவியைக் கண்டவுடன், "அந்த அம்மாள் அனுப்ப வந்தீர் போலும். எனக்கு இப்பொழுது பேச நேரமில்லை. என்னிடம் சரக்கு வாங்கப் பலர் காத்திருக் கின்றனர்; அவர்களை அனுப்பி விட்டு என் வீட்டி லுள்ள முதிர்ந்த பெற்றோர்களுக்கு உதவி செய்ய வேண்டும். பிறகு வீட்டுக் காரியங்களை முடிக்கவேண் டும். பிறகு மாலை நேரத்தில் பேச இடமுண்டு; அப்பொழுது வந்தால் பேசிக்கொள்ளலாம்" என்றனர்.

வணிகர் இருக்கும் நிலையும் அவர் செய்யும் தொழி லும் துறவிக்குச் சற்றேனும் பிடிக்கவில்லை. இவரிடம் எவ்வித அறிவை நாம் பெறக்கூடும் என்று அவர் ஐயுற்றார். என்றாலும் அவர் குறித்தபடி மாலையில் அவர் இல்லத்துக்குச் சென்றார். எழுந்து நடக்க இய லாத தம் முதிய பெற்றோர்க்கு வேண்டியவற்றை யெல்லாம் வணிகர் செய்து கொண்டிருந்தார். பல குழந்தைகள் அங்கே விளையாடிக் கொண்டிருந்தன. கொட்டிலில் சில மாடுகள் நின்றன. துறவியைக் கண்ட வுடன் வணிகர் வெளியே வந்து அவருடன் பேச லாயினர்.

வணிகர் துறவியை நோக்கி, "ஐயா! என்னுடைய குடும்பம் பெரியது. வீட்டில் செய்யக்கூடிய ஆள் யான் ஒருவனே. என் பெற்றோர்கள் வயது முதிர்ச்சியால் மிகுந்த தள்ளாமை அடைந்திருக்கிறார்கள். தலைமுறை தலைமுறையாக என் மூத்தோர் செய்து வந்த தொழி லையே நான் செய்து வருகிறேன். நான் என் கடமை களைச் சிறிதும் தவறாமல் செய்துவருகிறேன். என்னிடம்

பேராசையோ வஞ்சனையோ கிடையாது. என் கடமைகளைச் செய்து கிடைத்ததைக் கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகிறேன். எனக்கு விருப்பம் எதுவுமில்லை. நான் ஒருவரிடமும் சென்று ஒன்றையும் படிக்கவில்லை. என் வாழ்க்கை நெறியால் என் மனத்தில் சில உண்மைகள் தாமே புலப்பட்டுள்ளன. அவற்றை உமக்குக் கூறுவேன்'' என்று சொல்லித் தாம் கண்ட உண்மைகளை அவருக்குக் கூறினர்.

அவர் அன்று சொன்னவை "வியாதகீதை'' என்னும் பெயரால் வடமொழியில் இன்றும் விளங்கி வருகின்றன. ஸ்ரீ கிருஷ்ணபகவான் அருச்சுனனுக்குக் கீதையை உபதேசித்தார் என்பதைக் கேட்டிருப்பீர்களே! அந்தக் கீதையைப் படித்தபின் அறிஞர்கள் வியாதகீதையைப் படிக்கிறார்கள்.

இவ்வரலாறுகளால் கடமைகளின் பெருமைகளை நாம் உணர்கிறோம்.

பயிற்சி

நுட்பம்	பெருமிதம்	அடிசில்	இல்லம்
யோகம்	இரக்க	தவம்	முதிர்ச்சி
பயின்று	கணம்	உபதேசி	பேராசை
ஆணவம்	கொங்கணவன்	அருவருக்கத்தக்க	வஞ்சனை

2. யோகமுறை இன்னடிசில் கசாப்புக்கடை
முண்டெழு மெய்சுடுக்கம்

3. உபதேசம், கீதை, பகவான்—இவை வடமொழிச் சொற்கள்.

வினாக்கள்

1. துறவி தாம் ஆற்றல் பெற்றதை எப்பொழுது உணர்ந்தார்?

2. சோறுபோட அவ்வம்மைக்கு ஏன் நேரம் தாழ்ந்தது?

3. கசாப்புக் கடைக்காரரைக் கண்ட துறவி வியந்தது ஏன்?

4. கசாப்புக் கடைக்காரருக்கு அறிவு எதனால் உண்டாயிற்று?

5. அவர் இயற்றின நூலின் பெயர் யாது? அதன் பெருமை என்ன?

இலக்கணம்

ஒரு வாக்கியத்தில் சில முக்கியமான பகுதிகள் உண்டு.

துறவி கொக்கை எரித்தார்.

இதனில் **துறவி** செயலைச் செய்தவரைக் குறிப்பது—எழுவாய்.

எரித்தார் செயலைக் குறிக்கும்—பயனிலை.

எதை? என்ற கேள்விக்கு விடை **கொக்கை**—இது செயப்படுபொருள்.


பின்வரும் வாக்கியங்களிலுள்ள **எழுவாய், பயனிலை செயப்படுபொருள்** இவற்றைக் காட்டு.

1. கொக்கு சருகுகளை உதிர்த்தது.
2. கடைக்காரன் மாமிசத்தை விற்றான்.
3. கிருஷ்ணர் கீதையை உபதேசித்தார்.

கட்டுரை

1. இப்பாடத்திற்கு வேறொரு தலைப்புக் கொடு.
2. கசாப்புக் கடைக்காரர் செய்து வருவனவற்றை உன் சொற்களால் கூறுக.

7. செஞ்சிக் கோட்டை



தேசிங்கு மன்னனைப் பற்றிக் கேள்விப்படாத தமிழரே இரார் என்று கூறிவிடலாம். அவன் அஞ்சா நெஞ்சு படைத்தவன்; வீரர்களுள் வீரன். தான் ஒருவனாகவே நின்று பல பகைவர்களைக் கொன்று குவிக்கும் ஆற்றல் வாய்ந்தவனாக அவன் இருந்தான். இளம்பிராயத்திலேயே அவன் டில்லி பாதுஷாவினிடமிருந்த முரட்டுக் குதிரை யொன்றை அடக்கினான். அவனுடன் போருக்கெழுந்த நவாப்பின் படைகளை அவன் சின்னா பின்ன மாக்கினான். அவன் குடிகளிடத்தில் மிகுந்த அன்புடையவனாகவும் இருந்தான்.

அவன் அரசாண்ட ஊர் செஞ்சி என்பது. அங்குள்ள மலைகளின்மீது கோட்டைகளைக் கட்டிக்கொண்டு அங்கே அவன் வாழ்ந்து வந்தான். முன்காலத்தில்

மலையரண், காட்டரண், நிலவரண், நீரரண் என்ற நால் வகை அரண்களுக்கிடையே கோட்டைகளைக் கட்டிக் கொண்டு மன்னர்கள் வாழ்ந்து வந்தார்கள். செஞ்சியும் இவ்வகை அர்ண்களை இயற்கையிலேயே பெற்றிருந்தது.


செஞ்சி நகரின் எழிலைப் பற்றித் தேசிங்கு ராஜன் கதை என்ற அருமையான நூல் பின்வருமாறு அழகாகப் பகருகின்றது.

"செஞ்சி நகர்ச் சீரில் சிலவற்றை எடுத்துரைப்போம்;
எஞ்சிலிலா வீதிகளும், எழில் தோரண நிரையும்,
வாழை, கமுகுகளும், வளமாகக் கட்டியதும்,
ஏழைகளைக் கூவி அன்னம் இட்டு வருவதும்,
இந்திரலோகம் போல் இருக்கும் அரண்மனைகளும்,
கந்த மின்னார்களின் நல் கற்பின் திறமைகளும்,
வேதியர்கள் கூடி வேதங்கள் படிப்பதுவும்,
நீதி தவருமல் நிகழ்புலவர் பாடுவதும்,
பொன்னகரின் தன்மைபோல் பொருந்தி நின்றுடுவதும்,
மன்னர்சீர்க் கீர்த்திதனை வாழ்த்தி வருகிறதும்"

இவ்வாறு செழுமை வாய்ந்து விளங்கிய செஞ்சி இன்று மிக எளிய நிலையில் இருக்கின்றது. என்றாலும், பழைய பெருமைகளின் குறிகள் இன்னும் அங்கு இல்லாமற் போகவில்லை. அவற்றைப் பார்ப்பதற்காக மக்கள் அங்குப் போய் வருகின்றனர்.

விழுப்புரத்துக்கும் செங்கற்பட்டிற்கும் இடையே திண்டிவனம் என்ற ஓர் இருப்புப் பாதை வண்டி நிலையம்

உண்டு. அதனிலிருந்து பதினேழு மைல்கள் சென்றால் செஞ்சியை அடையலாம். செஞ்சி இப்பொழுது ஒரு தலைமை ஊராக இருக்கிறது. தாலூக்காவின் அதிகாரிகளின் காரியாலயங்கள் அங்கே உண்டு. அங்கே



தங்கிக் கொண்டு நாம் மலைமேலுள்ள கோட்டைகளைக் காணச் சொல்லலாம்.

இராஜகிரி என்பது மிகப் பெரியகோட்டை. அதைச் சூழ்ந்துதான் தேசிங்கின் காலத்தில் படை வீரர்கள் தங்கிய இடங்கள் இருந்தன. அம்மலை மீது ஏறும் வழியில் ஆறு மாடியுள்ள ஒரு கட்டடத்தை நாம் காணலாம். அதனருகே அரசருடைய குதிரை லாயமிருந்ததாம். அவ்விடம் இப்பொழுது பாழாய்க் கிடக்கிறது. அங்கே ஓர் அழகிய குளமுண்டு. அதைச்

சூழ்ந்து ஒரு மண்டப மிருக்கிறது. அம் மண்டபம் நிலமட்ட அளவே உயரமுள்ளதாக விருக்கிறது. அதன் கீழே செல்லும் வழியாக நாம் சென்று குளத்தை அடையலாம்.

அடுத்தாற்போல அரசன் தானியங்களைச் சேர்த்து வைப்பதற்காகக் கட்டிய பெரிய களஞ்சியங்கள் இருக்கின்றன. அவற்றிற்கடுத்தாற்போல அரசர் உடற் பயிற்சி செய்யும் சாலையும் இருக்கிறது.

மலையின்மீது ஏறும்போது வழியே நாம் பல மண்டபங்களைக் கடந்து செல்லவேண்டும். போகும் வழியில் பிரயாணிகள் தங்கிச் செல்வதற்கு இவை பயன்படும். மலையின் உச்சியில் அரங்கநாதர் ஆலயம், மணிக்கூண்டு, அரசர் தர்பார் மண்டபம், பொக்கிஷசாலை முதலானவை இருக்கின்றன. அரசர் வாழ்ந்த காலத்தில் இவை மிக ஆடம்பரமாக அமைந்திருக்க வேண்டும்.

இன்னும் இங்கே இரண்டு மலைகள் உண்டு. ஒன்று கிருஷ்ணகிரி; மற்றது அரங்ககிரி. கிருஷ்ணகிரி மிகவும் செங்குத்தானது. இதன் உச்சியில் சில ஆலயங்களும், களஞ்சியங்களும், மண்டபங்களுமுண்டு. அரங்ககிரியில் அரங்கநாதர் ஆலயம் இருக்கிறது. பள்ளிகொண்டிருக்கும் அப் பெருமான் முகத்தைத் திருப்பிக் கொண்ட நிலையில் அங்குக் காட்சியளிக்கின்றார். தேசிங்கு நவாப்புடன் போர் புரியுமுன் அக் கடவுள் முன் சென்று விடை வேண்டினராம். அவர் “இன்று வேண்டாம்; நாளைப் போகலாம்” என்று குறிப்பித்தனராம். அச்சொல்லை வீரன் கேளாமல் அன்றே போருக்குப் புறப்பட விடை கேட்டபோது

அவர் மனங்கசந்து முகத்தைத் திருப்பிக் கொண்டனராம்'' இவ்வாறு அங்குள்ளவர்கள் கதை கூறுகிருர்கள்.

இவ்வாறு நம் பண்டை வரலாறுகளைக் காட்டும் அறிகுறிகள் நாடெங்கும் மலிந்து கிடக்கின்றன. முடிந்த வரையில் நாம் அவற்றைக் காண்பது நலமாகும்.

பயிற்சி:

சொற்கள்

அரண்	**எஞ்சல்**	**கந்தம்**	**வேதியர்**	**படைவீரர்**
கிரி	**இயற்கை**	**தோரணம்**	**மின்னுர்**	**வேதம்**
லாயம்	**களஞ்சியம்**	**எழில்**	**நிரை**	**கற்பு**
கீர்த்தி	**பாழ்**	**மலிந்து**	**நிலையம்**	**தானியம்**

அஞ்சாநெஞ்சு பொன்னகர் உடற்பயிற்சி பொக்கிஷசாலை சின்னுபின்னம் காரியாலயம் மணிக்கூண்டு.

பின்வரும் சொற்களைப் புணர்த்தி எழுது :—

அந்த + கிளி. இந்த + சட்டி. எந்த + புத்தகம்.

அவனை + பார். பாக்கை + கடி. புத்தகத்தை + படி.

வினுக்கள்

1. தேசிங்கு மன்னனின் இளமையைப்பற்றி நீ அறிவன யாவை ?

2. செஞ்சிநகர் மக்கள் எவ்வாறு வாழ்ந்து வந்தனர்?

3. மூவகை அரண்கள் யாவை ?

4. இராஜகிரிக் கோட்டையில் நீ காணக்கூடியவை யாவை ?

5. அரங்கநாதர் முகத்தைத் திருப்பிக் கொண்டது ஏன் ?

இலக்கணம்

செயப்படுபொருளை எழுவாயாக மாற்றலாம்.

(உ - ம்) தேசிங்கு குதிரையை அடக்கினான்.
குதிரை தேசிங்கால் அடக்கப்பட்டது.

மேலே காட்டிய பின்வரும் வாக்கியங்களை மாற்றி அமை.

1. தேசிங்கு நவாப்பின் படைகளைச் சின்னாபின்னமாக்கினான்.

2. உலகத்தார் செஞ்சியின் கீர்த்தியை வாழ்த்துகிறார்கள்.

3. அங்கே நாம் பல கட்டடங்களைக் காணலாம்.

கட்டுரை

உன் ஊரிலிருந்து செஞ்சிக்குப் போகும் வழி யாது? விளக்கிக் கூறு.

8. மன்னரும் மாமுனிவரும்

திருச்சிராப்பள்ளியிலே விஜயரங்க சொக்கநாதர் என்ற நாயக்கமன்னர் ஆட்சிபுரிந்து வந்த காலத்திலே அவரிடம் தாயுமானவர் என்ற பெயருள்ள பெரியார் அமைச்சராய் அமர்ந்திருந்தார். தாயுமானவர் தமிழறிவும் வடமொழியறிவும் நிரம்பவும் பெற்றுக் கடவுளறிவு கைவந்தவராய்த் திகழ்ந்தார். உலக வாழ்க்கையில் பற்றற்றவராய் அவர் இருந்தும் அரசியல் காரியங்களில் அவர் ஒரு சிறிதும் வழுவினதில்லை. அவர், 'எல்லாம் இறைவன் செயலே' என்றும், எல்லாம் கடவுள் உருவமே, என்றும் கருதும் மனப்பான்மை பெற்றிருந்தார், அவருடைய குணநலன்களையும் அரசியல் திறமைகளையும் அரசன் உணர்ந்து அவரிடம் அளவிலா அன்பும் பக்தியும் கொண்டிருந்தான்.

ஒரு முறை அரசரிடம் காஷ்மீரத்திலிருந்து அருமையான சால்வை யொன்று வந்தது. அதன் அருமை வேலைப்பாடுகளைக் கண்டு அரசன் வியந்தான். அதனை அணியத்தக்கவர் தம் அமைச்சரே என்று அவன் கருதி அதனை அவருக்குக் கொடுத்தான். அச்சால்வையுடன் அவர் அரச சபையில் புகும்போது எல்லாருடைய கண்களும் அதனிடமே விழுந்தன.

சில நாட்கள் கழிந்தன. கூதிர்காலம் வந்தது. சிறு துளியும் பனியும் நாட்டைக் குளிரச் செய்தன. விலங்குகளும் பறவைகளும் தத்தம் இடங்களிலேயே ஒடுங்கிக் கிடந்தன. விடிந்து வெகுநேரம் ஆகியும் மக்கள் வெளியே வரவில்லை.

ஒரு நாள் தாயுமானவர் வயற்புறங்களுக்குச் சென்றிருந்தார். குளிர்காலமாகையால் அவர் அரசன் கொடுத்த சால்வையைத் தம்மீது போர்த்திருந்தார். அங்கே சாலையோரத்தில் குளிரால் நடுங்கிக்கொண்டு ஒரு கிழவி உட்கார்ந்திருந்தாள். அவள் உடலிலிருந்த புடவை கிழிந்தும் நனைந்தும் காணப்பட்டது. அவள் குளிர் தாங்கமுடியாமல் தன் கைகளால் உடலைப் பொத்திக்கொண்டு பற்கள் கிடுகிடுக்க உட்கார்ந்திருந்தாள். அமைச்சர் வருவதை அவள் கண்டும் அவளால் எழுந்து நிற்கமுடியவில்லை.



தாயுமானவர் அவளைக் கண்டார். அவர் மனம் உருகிற்று. அவர் உடனே தம்மேலிருந்த காஷ்மீர்ப் போர்வையை எடுத்து அக்கிழவியின்மீது போர்த்தி, அவள் கைகளைப் பிடித்துத் தூக்கி விட்டு மெதுவாக அவளைத் தன் வீட்டுக்குச் செல்லுமாறு பணித்தார். அவருடைய அரிய செயலைக் கண்டு அம்முதியவள்

நாத்தழதழக்கக் கண்களில் நீர் துளிக்க அவருக்கு நன்றியும் ஆசியும் கூறி ஏகினுள்.

இச் செய்தி எப்படியோ மன்னன் செவிகளுக்கு எட்டிற்று. அமைச்சர் தன்னை அவமதித்ததாகவே அவன் கருதினுன். மறுநாள் அவர் அவைக்கு வந்ததும் அவன் அவரை வணங்கி, "ஐயனே, நான் தங்களுக்கு அருமையாக வழங்கிய சால்வை எங்கே?" என்று வினவினுன்.

அவர், "அகிலாண்டேசுவரிக்குக் கொடுத்துவிட்டேன்" என்றுர். அகிலாண்டேசுவரி அவ்வூரில் கோயில் கொண்டருளிய அம்பிகையின் திருநாமம்.

உண்மையை உணரமாட்டாத மன்னன், "அகிலாண்டேசுவரிக்கா? பிச்சைக்காரக் கிழவிக்கா?" என்று அதட்டிக் கேட்டான்.

அதற்குத் தாயுமானவர், "மன்ன, தங்கள் கண்களுக்குக் கிழவியாகவும் குமரியாகவும் தோன்றலாம். என் கண்களுக்கு எல்லாம் தெய்வமயமாகவே தோன்றுகின்றன. நான் என்ன செய்வேன்! அவள் குளிர் தாங்கமாட்டாமல் தவிக்கும்போது எனக்குப் போர்வை ஏன்? அன்றியும் மன்ன, தாங்கள் அளித்த பெருவிலைப் போர்வைக்கும் மிக எளிய ஆடைக்கும் எனக்குச் சிறிதும் வேற்றுமையில்லை. தங்கள் அன்புடைமையை மறுக்கலாகாதென்றே அதனை ஏற்றுக்கொண்டேனேயன்றி அதனிடம் நான் வைத்த பெருமைக்காகவன்று" என்றுர்.

இச் சொற்களைக் கேட்ட அரசன் தலை குனிந்தான். தாயுமானவரின் உள்ளப் பெருமையைக் கண்டு அவரை

வியந்தான். தான் அவருக்குச் செய்த குற்றத்துக்காக அவருடைய மன்னிப்பையும் கேட்டான்.

பயிற்சி:

சொற்கள்

அமைச்சர்	**அரசியல்**	**போர்த்து**	**நிரம்பவும்**
திறமை	**குமரி**	**கைவந்தவர்**	**வேலைப்பாடு**
மன்னிப்பு	**இறைவன்**	**அணிய**	
கடவுளறிவு	**மனப்பான்மை**	**கூதிர்க்காலம்**	
உலகவாழ்க்கை	**குணநலன்**	**அகிலாண்டேசுவரி**	

பின் வரும் சொற்களைப் புணர்த்திக் காட்டு:—

கண்களுக்கு + கிழவியாகவும்: அவருக்கு + செய்த. கூதிர் + காலம். அவனை + கண்டார்.

வினாக்கள்

1. தாயுமானவர் மன இயல்புகளைப் பற்றி நீ அறிவன யாவை ?
2. கூதிர்கால நிலைமை எத்தகையது ?
3. தாயுமானவர் கிழவியை யாராகக் கண்டார் ?

இலக்கணம்

பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாயைச் செயப்படுபொருள்களாக மாற்று:—

1. சால்வை அரசனால் வாங்கப்பட்டது.
2. கடவுள் தாயுமானவரால் எங்கும் காணப்பட்டார்.
3. அமைச்சர் அரசனால் கோபிக்கப்பட்டார்.

கட்டுரை

புத்தக சாலையில் தாயுமானவரைப் பற்றி ஏதேனும் புத்தகம் இருக்கிறதா என்று பார்த்து அதனைப்படி.

9. விதைகள் பரவும் விதம்

மனிதர்க்கு இருக்கும் உணர்ச்சிகளைப் போலவே தாவரங்களுக்கும் உண்டு. மனிதர்கள் தம் குழந்தைகளைப் பாதுகாக்க எவ்வளவு கவலை கொள்கிறார்களோ, அவ்வளவு கவலையைச் செடி கொடிகளும் மரங்களும் தம் குழந்தைகளைக் காக்கக் கொள்கின்றன.


செடிக்கு அதன் விதையே குழந்தை. அது வளர்ந்து தன் முறையில் புதிய விதைகளை உண்டாக்குகிறது. இவ்வாறு செடி தன் இனத்தை வளர்க்கிறது. விதையின் பாதுகாப்புக்குத் தோலும் ஓடும் உள்ளன. அவற்றினுள் விதை உயிருடன் நீண்ட நாள் பிழைத்திருக்கும்; பிறகு அது நிலம், நீர், காற்று முதலிய உதவிகள் அமைந்தவுடன் செடியாக முளைத்து வளரும்.

நெற்றுக்களிலும் நன்றாகப் பழுத்த பழங்களிலும் உள்ள விதைகளே நன்றாக விளைந்த விதைகள். அவரை, வெண்டை முதலியவற்றின் நெற்றுக்களில் விதைகள் மட்டுமே இருக்கும்; அவற்றை ஆட்டினால் சலசல வென்று ஒலிப்பதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். மா, கொய்யா, பலா, நாரத்தை முதலிய பழங்களில் சாறும் சதையும் விதைகளைச் சூழ்ந்திருப்பதையும் பார்த்திருப்பீர்கள்.

மனிதர்களும் விலங்குகளும் பறவைகளும் பழங்களைத் தின்கின்றன. அவ்வாறு பழவிதைகள் பலவிடங்களிற் போய்ச் சேருகின்றன. பறவைகள் எச்சமிடும்

இடங்களில் செடிகள் வளர்வதற்கு இதுதான் காரணம். இவ்வாறு பழங்களை யாரும் விரும்பி நாடுவதற்காகவே அதற்கு இரசமும் சதையும் அமைந்திருக்கின்றன.

சாரில்லாத காய்கள் முற்றின பிறகு வெடிக்கும். அப்பொழுது விதைகள் சிதறும், அப்படிச் சிதறுவதால் விதைகள் செடியின் அடியிலேயே விழாமல் அகன்று போம். அப்படிச் செய்வதால் குழந்தைச் செடிகள் ஒரே இடத்தில் பிறந்து வளர இடமில்லாமல் தவிக்கமாட்டா.



சில சமயங்களில் பஞ்சு போன்ற பொருள்கள் பிள்ளைகள் எட்டிப் பிடிக்கும் உயரத்தில் பறப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அவற்றைப் பிடித்துப் பார்த்தால் அவை ஒவ்வொன்றின் அடியிலும் ஒவ்வொரு விதை இருப்பதாகக் காண்பீர்கள். எருக்கஞ்செடி விதைகள் இவ்வாறு பறக்கும்.

புற்கள் உயரமாக வளர்ந்திருக்கும் இடங்களின் வழியாக நடந்து சென்றால் நம் உடைகளில் முள் போன்ற பொருள்கள் ஒட்டிக்கொள்வதைப் பார்த்-

திருக்கிறீர்களா? இவை அங்கு மேயும் ஆடு மாடுகளின் உடல்களில் ஒட்டிக்கொள்ளும். இவைகளும் விதைப் பொதிகளே. இவ்வாறு புற் பூண்டுகள் விலங்குகளையும் மனிதர்களையும் வாகனங்களாகக் கொண்டு தம் குழந்தைகளை வெளியே சென்று வளரச் செய்கின்றன.

ஆமணக்கு விதைகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அவை பார்வைக்கு வண்டுகள் போலத் தோன்றும். அவற்றைப் பறவைகள் தம் தின்பண்டங்களெனக் கருதி எடுத்துப்போய், பிறகு தாம் ஏமாந்ததைக் கண்டு அவற்றை அங்கே போடும்.

இவ்வாறு தாவரங்கள் தங்கள் விதைகளை மிகுந்த சாமர்த்தியத்துடன் நாலாபக்கங்களிலும் பரப்புகின்றன.

பயிற்சி:

சொற்கள்

1. உணர்ச்சி	**இனம்**	**சாறு**	**முற்று**	**வாகனம்**
தாவரம்	**தோல்**	**எச்சமிடும்**	**அகன்று**	**ஏமாந்தது**
பாதுகாக்க	**ஓடு**	**இரசம்**	**எட்டி**	**சாமர்த்தியம்**
முறை	**நெற்று**	**சதை**	**பொதி**	**காரணம்**

எவ்வளவு... அவ்வளவு எட்டிப்பிடித்தல். நாலாபக்கங்களிலும்

சில சொற்கள் பெயர்களாகவும் வினைகளாகவும் வழங்கும். அவற்றின் பொருள் வேறுபாடுகளைக் காண வேண்டும். உ-ம் பரப்பு.

இந்த அறையின் நிலப்பரப்பு 200 சதுர அடி.

அரிசியைப் பலகையில் பரப்பு.

பின்வரும் சொற்களைப் பெயராகவும் வினையாகவும் உபயோகித்துக் காட்டு.

அகல், அடி, அடை, அணி, அணை.

வினாக்கள்

1. விதைகளுக்குத் தோலும் ஓடும் எப்படிப் பயன் படுகின்றன ?

2. விதை செடியாக வளர உதவுவன யாவை ?

3. சாறும் சதையும் உள்ள பழங்கள் சிலவற்றின் பெயர்களைச் சொல்லு.

4. அவற்றால் பயன் என்ன ?

5. முற்றிவெடிக்கும் காய்கள் சில சொல்லு.

6. சில விதைகள் பறக்கின்றன ? உதாரணம் கொடு.

7. பிராணிகளை வாகனமாகக் கொண்டு பரவும் விதைகள் யாவை ?

8. காட்டாமணக்கு பறவைகளை எப்படி ஏமாற்று கிறது ?

இலக்கணம்

மாடு **ஓடிற்று.**

இடையன் மாட்டை **ஓட்டினான்.**

இவை இரண்டிற்கும் என்ன வேற்றுமை ?

ஓடிற்று என்பது தன்வினை.

ஓட்டினான் என்பது பிறவினை.

பின்வரும் பிறவினைகளை வாக்கியங்களில் வைத்துக் காட்டு.

பாய்ச்சு : உருட்டு. போக்கு. விளக்கு.

கட்டுரை

ஒரு புல் தன் விதைகளை நோக்கி, "நீங்கள் தந்திரமாக வேறிடம் சென்று பிழையுங்கள்" என்று சொல்வது போலச் சொல்லு.

10. ஆறு

கல்லும் மலையும் குதித்து வந்தேன்—பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்.
எல்லை விரிந்த சமவெளி எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.

காயும் நிலத்தழல் ஆற்றி வந்தேன்—அதில்
கண்குளிரப் பயிர்கண்டு வந்தேன்.
ஆயும் மலர்ப்பொழில் செய்து வந்தேன்—அங்கென்
ஆசை தீர விளையாடி வந்தேன்.

ஆயிரம் காலால் நடந்து வந்தேன்—நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்து வந்தேன்.
நேயமுறப் புன்செய்க் காட்டினிலும்—அங்கங்கு
நீரை இறைத்து நெடுக வந்தேன்.

மாங்கனி தேங்கனி வாரி வந்தேன்—நல்ல
வாச மலர்களும் அள்ளி வந்தேன்.
திங்கரும் பாயிரம் தள்ளி வந்தேன்—மிகத்
தேனும் தினையுமே சேர்த்து வந்தேன்.

அல்லும் பகலும் அலைந்து வந்தேன்—எங்கள்
ஆழி இறைவனைக் காண வந்தேன்.
நில்லும் எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்ட வழி போக வேண்டும் அம்மா!

—தேசிக விநாயகம் பிள்ளை.

குறிப்புரை

அழல் - நெருப்பு. பொழில் - சோலை. கால் - வாய்க்கால். தீம் - இனிய, அல் - இரவு. ஆழி - கடல்.

கட்டுரை

1. மலை, காடு, பாலை, சமவெளி, கடற்கரை என்று நான்கு நிலங்களின் வழியாக ஆறு, ஓடுகிறது என்பது இங்கு எவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது ?

2. நன்செய், புன்செய் நிலங்களுக்கு எவ்வாறு பயன்பட்டது ?

3. ஆறு சுமந்து வந்தவையாவை ?

4. ஆழி இறைவன் என்பது எதனைக் குறித்தது ?

11. கலிங்கப் போர்

பதினோராம் நூற்றாண்டில் சோழ வேந்தனான குலோத்துங்கன் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து கொண்டு அரசு புரிந்து வந்தான். இவனுக்கு அபயன் என்ற வேறொரு பெயரும் உண்டு. அவன் பல நாடுகளையும் வென்று தன் இராஜ்யத்தைப் பெருக்கிக் கொண்டான்.

ஒரு முறை அரசன் காஞ்சியம்பதியை யடைந்து அங்கேயுள்ள சித்திர மண்டபம் என்ற அரண்மனையில் கொலு வீற்றிருந்தான். அப்பொழுது பல சிற்றரசர்கள் அவனைக் கண்டு அடி பணிந்து அவனுக்குரிய கப்பப் பொருள்களைக் கட்டினர். அரசருடைய காரியஸ்தர்கள் அத்தொகைகளைக் குறித்துக் கொண்டு அரசருக்குக் கப்பங்கட்டிய சிற்றரசர்களின் பெயர்களை அவ்வப் பொழுது அறிவித்து வந்தனர். முடிவில் அரசன், "கப்பங்கட்டாதவர் எவரேனும் உண்டோ?" என்று வினவினான். அருகிலிருந்தவர், "வடகலிங்க மன்னன் இரண்டு முறைகளாகக் கட்டவில்லை" என்று கூறினர்.

அச்சொற்களைக் கேட்ட மன்னன் கோபக்குறி சிறிதும் காட்டாமல் தன் படைத் தலைவரை நோக்கி, "நம் யானைப் படைகளுடன் அந்நாட்டின் மீது படையெடுத்து அவனையும் கொணர்மின்" என்று கட்டளையிட்டான்; அங்கே கருணாகரத் தொண்டைமான் என்ற படைத்தலைவன் இருந்தான். அவன் அரசனை வணங்கித் தான் போய் கலிங்கத்தை வென்று விடுவதாகக் கூறினான்.

தொண்டைமான் மிகச் சிறந்த வீரன்; சோழர் படைத்தலைவர்களுள் அவனே சிறந்தவன். அவன்

நால்வகைப் படைகளுடன் எழுந்தான். அவன் பகைவர் நாட்டினுள் புகுந்தவுடன் அந்நாட்டு ஊர்களையெல்லாம் சூறையாடினான். மக்கள் அவனுக்கு முன் நிற்கமாட்டாமல் ஓடோடிச் சென்று தம் மன்னனான அனந்த



பதுமன் என்றவனிடம் முறையிட்டார்கள். அவன் உடனே வெகுண்டெழுந்தான். கைகளோடு கைகளைப் புடைத்தான். சோழன் படைகளை ஒரு நொடியில் தொலைத்து விடுவதாக வீரம் பேசினான்.

அவனுடைய அமைச்சர்கள் எவ்வளவு சொல்லியும் அவன் கேட்கவில்லை. கலிங்கர் படையும் சோழர் படையும் கை கலந்தன. கருணாகரன் யானை மீதிருந்து கொண்டு கடும்போர் புரிந்தான். கலிங்கர் முறியடிக்கப் பட்டனர். தோற்றவர்கள் தமிழர் படைக்குத் தப்ப வெண்ணிப் பல்வேறு வேடங்களைப் புனைந்து கொண்டு ஓட்டமெடுத்தனர். கலிங்க மன்னன் ஓடி யொளித்துக்

கொண்டான். தொண்டைமான் அங்குள்ள செல்வங்கள் பலவற்றையும் திரட்டிக்கொண்டு தன் மன்னன் முன் பணிந்தான்.

இவ்வரலாற்றை ஓர் அழகிய நூலாக ஜயங் கொண்டார் என்ற புலவர் பாடியுள்ளார். அதற்குக் கலிங்கத்துப் பரணி என்பது பெயர். தமிழிலுள்ள வீரச் சுவை நூல்களுள் இது மிகச் சிறந்தது.

பயிற்சி ;

1.	**கப்பம்**	**நொடி**	**முறியடிக்கப்படுதல்**
	தோற்றம்	**வேடம்**	**பரணி**
2.	**சித்திரமண்டபம்**	**சிற்றரசர்**	**வீரச்சுவை**
	கொலுவீற்றிருத்தல்	**பல்வேறு**	

3. பின்வரும் சொற்களைக் கூட்டி எழுது.

வேறு + ஒரு சிறுமை + அரசர்கள்.

அ + நாடு. வெகுண்டு + எழுந்தான்.

வினாக்கள்

1. இவ்வரலாறு எந்த மன்னன் காலத்தில் நிகழ்ந் தது ?
2. கருணாகரத் தொண்டைமான் யார் ?
3. கலிங்கம் எங்குள்ளது ? காஞ்சியிலிருந்து அதற் குப் போகும் வழி யாது ? படத்தைப் பார்த்துக் கூறுக.
4. கலிங்கப் போர் எவ்வாறு முடிந்தது ?
5. கலிங்கத்துப் பரணியைப் பாடியவர் யார் ?

இலக்கணம்

பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட பெயர்ச் சொற் களை வினை முற்றுக்களாக மாற்றி எழுதுக.

(1) மாட்டின் **தீனி** புல் ஆகும்.
(2) தமிழரின் **உணவு** அரிசி ஆகும்.
(3) திருமாலின் **படுக்கை** பாம்பாகும்.
(4) யானையின் **நடை** வேகமானது.
(5) பிராணிக் **கொலை** கொடியது.
(6) கடலின் **பரப்பு** எல்லையற்றது.

கட்டுரை

பத்திரிகைகளிலிருந்து நீ படித்திருக்கும் ஏதேனும் ஒரு பேராரைப்பற்றி நீ அறிந்ததைச் சொல்லு.

12. பெரிய மூடன் யாவன்?

ஒரு நாள் இரு நண்பர்கள் கடைத் தெருவின் வழியே நடந்து சென்று கொண்டிருந்தனர். அவர்களுக் கெதிரே ஒரு கிழவி வந்து கொண்டிருந்தாள். அந் நாட்டின் வழக்கத்தின்படி இருவர் சாலையில் எதிர்ப்பட நேர்ந்தால் ஒருவருக்கொருவர் 'வணக்கம்' என்று சொல்லிக்கொள்ள வேண்டும். கிழவி முதலில் அவர்களை நோக்கியதால் அவர்களுக்கு வணக்கம் கூறினாள். அவர் களும் மறு வணக்கம் கூறி அகன்றனர்.

ஆனால் சிறிது தூரம் செல்வதற்குள் அவர்களுக்கோர் ஐயம் உண்டாயிற்று. ஒருவன் பிறனை நோக்கி, "அக் கிழவி என்னைக் குறித்தே வணக்கம் கூறினாள் என் றெண்ணுகிறேன்" என்றான். அதற்கு மற்றவன், "அன்று; அவள் எனக்கே வணக்கம் கூறினாள்" என்றான். அவ்விருவர்களும் அக்கிழவியையே கேட்டு அறிந்து கொள்ளலா மென்றெண்ணினார்கள்.

அவ்வண்ணமே அவர்கள் திரும்பிச் சென்று, அம் முதியாளைக் கண்டு வினவினர். அவள் அவர்களுடைய அறிவின்மையைக் கண்டு மனத்துள் நகைத்து, "உங்களுள் பெரு மூடனை வணங்கினேன்" என்றாள். "அத்தகையவன் யாவன்?" என்று அவர்கள் கேட்க, "நீங்கள் செய்த மூடச் செயல்களுள் சிறந்தவற்றைக் கூறுங்கள். யார் பெரிய மூடர் என்று நான் அறிந்து சொல்கிறேன்" என்றாள்.

மூவரும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டனர். முதல் மூடன் தன் கதையைப் பின்வருமாறு சொன்னான்.

"ஒரு நாள் நான் விலாப் புடைக்க உண்டு ஊர்ப் புறத்திலுள்ள குளக்கரையில் ஒரு மரநிழலில் படுத்து உறங்கினேன்; நன்றாய் அயர்ந்துவிட்டேன். சற்றுப் புரண்டு படுத்த போது என் தலைப்பாகை நெகிழ்ந்து குளத்தில் விழுந்துவிட்டது. நான் எழுந்து பார்ப்பதற்குள் அது தண்ணீரில் முழுகி விட்டது.



எங்களுள் வீட்டில் ஏதேனும் இழவு நேர்ந்தால் தான் தலைப்பாகை இல்லாமலிருக்கலாம். ஆகவே நான் அதனை இழந்த நிலையிலிருக்க விரும்பாமல் வேகமாக வீடு நோக்கித் திரும்பினேன். என்னைத் தூரத்தில் கண்ட என் மனைவி என்னைச் சேர்ந்தவர்

யாரோ இறந்து விட்டாரென்றெண்ணி ஓவென்றலற லானாள். அவள் அழுவதைக் கண்டு நானும் கார ணத்தை ஆராயாமல் உரக்க அழத் தொடங்கினேன். இவ்வாறு நாங்கள் அழுவதைக் கண்டு அக்கம் பக்கங் களில் உள்ளவர் எல்லோரும் கூடி விட்டனர். அவர்கள் எங்களை விளித்துக் கேட்டபோது, நான் நடந்ததைக் கூறினேன். அவர்கள் நகைத்து என்னைப் போன்ற மூடன் இல்லை என்றார்கள். இதுவே என் கதை'' என்றான்.

மற்றவன் தன் கதையைக் கூறத் தொடங்கினான். அவன்,

"தாயே! என் கதை என் திருமணத்தை ஒட்டி நிகழ்ந்தது. என் நண்பர்கள், நான் பெண் வீட்டிலிருக் கும்போது அதிகமாகப் பேசக் கூடாதென்றும் அதிக மாக உண்ணக் கூடாதென்றும் எச்சரித்திருந்தார்கள். நான் அவ்வண்ணமே அடக்கமாக நடக்க எண்ணினேன். நான் ஒருவரோடும் அதிகமாகப் பேசுவதில்லை. இலை யில் உட்கார்ந்தால் இரண்டொரு பிடி உணவுக்கு மேல் உண்பதில்லை. எனக்குப் பசி அதிகமாயிருந்தும் மரியா தையாகச் சிறிதளவே உண்டு வந்தேன். என் உடல் இளைத்துவிட்டது. அதனைக் கண்ட என் மனைவி உணவு அதிகம் உண்ணாமைக்குக் காரணம் என்னவென்று பலமுறை வினவினாள். நான் 'வயிற்றுவலி' என்று பொய் கூறினேன்.

இப்படிச் சில நாட்கள் கழிந்தன. ஓரிரவு எனக்குப் பசி முற்றி விட்டது. எல்லோரும் உறங்குகிற நேரம் பார்த்து நான் மெல்ல அடுப்பங்கரைக்குச் சென்று அங்கு ஏதேனும் தின்பண்டங்கள் உளவோ என்று

ராய்ந்தேன். ஒரு பாத்திரத்தில் லட்டுகள் இருந்தன. அவற்றில் இரண்டினை எடுத்து வாயில் போட்டுக் கொண்டேன். நான் இருட்டில் நடமாடியதால் என் கைகள் பட்டுச் சில ஏனங்கள் கீழே விழுந்தன. அந்த ஓசையைக் கேட்டு வீட்டிலுள்ளார் யாவரும் விழித்துக் கொண்டு ஓடிவந்தனர். நான் மெதுவாக நழுவி என் படுக்கையறையுள் நுழைந்தேன்.

என் வாயில் உள்ளவற்றை எனக்கு விழுங்க நேர மில்லை. என் மனைவி என் தாடைகள் பருத்திருப்பதை நோக்கி அலறினாள். வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் அங்கே வந்தனர். அவர்கள் வயிற்று வலியால் என் முகம் வீங்கி விட்டதென்று எண்ணினார்கள். ஒருவர் ஓடிப்போய் ஓர் இரண வைத்தியரை அழைத்துவந் தார். அவர் என் முகத்தைப் பார்த்து, ‘இப்பொழுதே இவர் கன்னத்தில் ஓரிடத்தில் கிழித்துக் கெட்ட குருதியை வெளிப்படுத்தினாலன்றி இவர் பிழைக்க மாட் டார் என்று கூறிக் கத்தியைத் தீட்டினார். நான் அச் சத்தால் வாயைத் திறந்தேன். இரண்டு லட்டுகளும் தொப்பென்று கீழே விழுந்தன. அப்பொழுது அவர்கள் நகைத்ததையும் பேசியதையும் என்னவென்று கூறு வேன்! எல்லோரும் என்னை முழு மூடன் என்றார்கள். நானும் அப்படியேதான் எண்ணுகிறேன்'' என்றான்.

அக்கதையைக் கேட்டு, ‘நீயே பெரிய மூடன்! உனக்கே என் வணக்கம் உரியது’ என்று கிழவி சொல்லிப் போனாள். அவர்களும் தங்கள் ஐயம் நீங்கி மகிழ்ச்சியுடன் தம் வழியே ஏகினார்கள்.

பயிற்சி :

1. எதிர்ப்பட புரண்டு எச்சரித்து அலறினேன் உரியது வணக்கம் தலைப்பாகை இளைத்து வீங்கி ஏகினார் ஐயம் இழவு முற்றிவிட்டது கன்னம் முதியாள் விளித்து ஏனம் தீட்டினார்
2. அறிவின்மை அக்கம்பக்கம் திருமணம் பலமுறை பசி முற்றிவிட்டது வயிற்றுவலி இரண வைத்தியர் முழு மூடன்

3. பின்வரும் சொற்களின் பொருளைக் காட்ட வேறு சொற்கள் கூறு.

கிழவி, தின்பண்டம், எண்ணுகிறேன், ஐயம்.

வினாக்கள்

1. மூடர்களுக்குத் தோன்றிய ஐயம் என்ன?
2. முதல் மூடன் தலைப்பாகையை எப்படி இழந்தான்.
3. அவன் மனைவி என்ன எண்ணி அழுதனள்?
4. முதல் மூடனின் மூடத்தனம் எங்கே வெளிப் படுகிறது?
5. இரண்டாம் மூடன் தன் மாமன் வீட்டில் எவ் வாறு நடந்துகொண்டான்?
6. அவன் கன்னம் பருத்திருந்ததற்குக் காரணம் என்ன?
7. அவனைக்கண்டு வீட்டார் நகைத்ததுஎப்போது?
8. கிழவியின் தீர்ப்பு சரியானதா? எப்படி?
9. இக்கதையின் சுவை யாது?

இலக்கணம்

கீழே சில குணப்பெயர்களைத் தந்திருக்கிறோம். அவற்றைப் பெயரெச்சமாக வைத்து வாக்கியங்களை அமைக்க.

நன்மை	பெருமை	பொய்மை
கருமை	சிறுமை	மென்மை
முதுமை	உண்மை	வெண்மை

கட்டுரை

'நிழல் கண்ட இடத்தில் உறங்கு, நீர் கண்ட இடத்தில் உண் - அந்நியர் வீட்டில் கட்டின பசுவைப்போல் இரு,' என்று ஒரு மூடனுக்கு அவன் தாய் உபதேசித்திருந்தாள். அவன் ஒருநாள் மனைவியின் வீட்டுக்குப் போனான். இந்த உபதேசத்தை உள்ளபடி நடத்திக் காட்டினான்.

இக்குறிப்புக்களைகொண்டு ஒரு நகைப்புக் கதைகட்டு.

13. விறகு வெட்டி பாடியது

தென் மதுராபுரியிலே வரகுண பாண்டியன் செங்கோல் செலுத்தி வந்தான். அவன் அவையிலே பல கலைகளிலும் நிரம்பிய அறிவினர் பலர் குழுமியிருந் தனர். மன்னன் அருங்கலை விநோதன் ஆகையால் அவன் அவர்களைத் தன் கண்ணும் கருத்துமாகப் போற்றி வந்தான். அவனால் போற்றப்பட்ட கலைஞர்கள் பாணபத்திரர் என்பார் ஒருவர். அவர் இசைக்கலை வல்லுனராயிருந்ததோடு சிவபிரான்மீது அளவிலா அன்பும் கொண்டுவந்தார்.

ஒருநாள் வடநாட்டிலிருந்து ஏமநாதன் என்ற இசைப் புலவனொருவன் மதுரை நகரை அடைந்து அரசனைக் கண்டு தன் இசைத் திறமைகளை யெல்லாம் காட்டினான். அரசன் அவனுடைய அறிவை மெச்சி அவனுக்குப் பலவகைச் சிறப்புக்களையும் செய்தனன். அவற்றால் இறுமாப்புண்ட வடநாட்டுக் கலைஞன் தன் இசையறிவுக்கு மிஞ்சியது எதுவுமில்லை என்றும், தன்னை வெல்பவர் உலகத்தில் வேறெங்குமிலரென்றும் நாப்பறை அடித்துக் கொண்டிருந்தான். அவனுடைய சீடர்கள் நகரெங்கும் திரிந்து தம் ஆசானின் திறத்தை அளவு கெட மிகுத்துக் கூறிக்கொண்டிருந்தனர்.

மன்னன் இவற்றைக் கேட்டுப் பொறுதவனாய்த் தன் அவைப் புலவனான பாணபத்திரனை விளித்து, "ஐயா, அந்நியன் ஒருவன் இவ்வாறு பிதற்றுவதை நான் பொறேன்; நாளை நீர் நம் அவையில் ஏமநாதன் முன்பு நம் தமிழிசையின் பெருமையை நாட்டவேண்டும்" என்று பணித்தான்.

பாணபத்திரருக்கு இஃதொரு சோதனையாயிற்று. ஏமநாதனின் இனிய பாடலைக் கேட்டு அவரும் அவனை வியந்து, ‘ இவன் முன் நம் புலமை எங்கே’ என்று ஏங்கியிருந்தார். அரசன் பணியைக் கேட்டு அவர் மனம் புழுங்கினார். அரசனின் ஆணைக்கு யாதும் மறுக்க இயலாமல், “ஐய, தங்கள் அன்பும் சோமநாதன் கருணையும் கொண்டு நாளைப் பாடுவேன்” என்று கூறி வெளியேறினார்.



நேரே அவர் சோமசுந்தரக் கடவுள் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஆலயம் சென்று அவர் திருமுன் வணங்கி, “தேவரீரே! எனக்குத் துணை. பாண்டி நாட்டின் நற்பெருமையையும் தமிழிசையின் உண்மைப் புகழையும் நிலைநிறுத்தத் தாமே துணைபுரிய வேண்டும்” என்று மன்றாடினார்.

அப்போது அந்தி வேளை. தெருவிலே ஒரு கிழவன் சுமக்க முடியாத விறகுச் சுமை யொன்றைச் சுமந்து கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டு சென்றான். அவன் நேராக ஏமநாதன் தங்கியிருந்த விடுதியின் வாயிற் சென்று அங்குத் தன் தலைச் சுமையை இறக்கி வாயிலில் அமர்ந்தான். அவன் தன் தோளில் கட்டியிருந்த பழைய யாழை யெடுத்து மீட்டிச் சாதாரி என்னும் பண்ணை இனிய குரலில் பாடினான்.

அவ்விசையைக் கேட்டு வானத்திற் பறந்து கொண்டிருந்த பறவைகள் மயங்கி வீழ்ந்தன; தம் கன்றுகளை எண்ணி வீடுகளுக்கு விரைந்து சென்று கொண்டிருந்த கறவைகள் தாம் மேலே செல்ல மாட்டாது ஆங்காங்கே நின்றன. வற்றின மரங்கள் தழைத்தன. ஓடுகிற நீரும் நிலைத்தது. மாந்தர்களுடைய செய்தியைச் சொல்லவும் வேண்டுமோ? ஏமநாதன் வீட்டினுள்ளிருந்து வெளியே வந்தான். ஓர் எளிய விறகு வெட்டி தன் வீட்டு வாயிலில் அமுதத்தையும் தேனையும் பாலையும் குழைத்துப் பாடுவதைக் கண்டு விம்முற்றான்.

அவன் அம்முதியோனை அணுகி, "ஐயா, தாங்கள் யார்?" என்று வினவினான். அதற்குக் கிழவன், "ஐயா, நான் ஓர் ஏழை விறகு வெட்டி. எனக்குச் சிறிது இசைப் பயித்தியம் உண்டு. அதனில் நல்லறிவு பெறலாமென்று என் ஊர் அரண்மனை வித்துவானிடம் சென்று இசை கற்பிக்க வேண்டினேன். அவரும் என் எளிமையைப் பாராட்டாது அன்புடன் கற்பித்தார்.

ஆனால் நான் தம் இசைப் புலமைக்கு ஏற்றவனல்லன் என்று என்னை விலக்கிவிட்டார். அப்பெருமா

னுடைய சிறந்த அறிவு எங்கே? மூத்துத்திரைத்த என் அறிவீனம் எங்கே? அவர் வீட்டுக் கன்றுக் குட்டியும் என்னைவிட நூறு மடங்கு மேலான இசை யறிவு பெற்றிருக்கிறது. நான் விறகு வெட்டியாவது பிழைக்கலாமென்று அவ்வாறே செய்துவருகிறேன் " என்றான்.

இச் சொற்களைக் கேட்ட வடநாட்டுப் புலவனுக்குக் கிலி பிடித்துக்கொண்டது. தான் ஊரெல்லாம் தன் பெருமையைப் பறையடித்தபின் மறுநாள் பாணபத்திரர்முன் படுதோல்வியுற அவன் மனம் இசையவில்லை. அவன் அன்றிரவு ஒருவருமறியாமல் ஓடிவிடத் தீர்மானித்தான்; அவ்வாறே செய்யவும் செய்தான்.

மறுநாள் அவை கூடிற்று. பாணபத்திரர் பரமேசுவரரைத் தியானித்துக் கொண்டே நடுநடுக்கத்துடன் அவையுள் புகுந்தார். நகர் முழுவதும் இசைப் போட்டியைக் காண அங்கே குழுமிற்று. ஏமநாதன் சென்ற இடமே தெரியவில்லை. பாணபத்திரரே வென்றார்.

பயிற்சி:

சொற்கள்

செங்கோல்	திறமை	ஆசான்	ஏங்கி	வித்துவான்
கலை	மெச்சு	விளித்து	அந்தி	சீடர்
குழுமி	சிறப்பு	அந்நியன்	யாழ்	கிலி
போற்றி	இறுமாப்பு	பணி	பண்	
இசை	கலைஞன்	சோதனை	விம்முற்றான்	
செங்கோல் செலுத்து		அளவிலா அன்பு		எழுந்தருள்
கண்ணும் கருத்தும்		நாப்பறை		மூத்துத்திரைத்து

பின் வருவனவற்றைப் பெயராகவும் வினையாகவும் உபயோகி :

பணி-இசை-குழை-தழை-பண்-கலே.

இருபொருள்களும் கூறு :

வினக்கள்

1. பாணபத்திரனின் இயல்புகள் யாவை ?
2. ஏமநாதன் செருக்குற்றுச் சொன்னவை யாவை?
3. பாணபத்திரன் கடவுளை வேண்டியது என்ன ?
4. கிழவன் தன் வரலாற்றை எப்படிக் கூறினான் ?
5. ஏமநாதன் ஓடக் காரணம் என்ன ?

இலக்கணம்

1. இரண்டாம் பாராவிலுள்ள, **அடைந்து, கண்டு, மெச்சி, திரிந்து, மிகுந்து** இச்சொற்கள் என்ன சொற்கள் ? அவை கொண்டு முடியும் பிற சொற்கள் யாவை ?

2. **அடைந்த, கண்ட, மெச்சிய, திரிந்த, மிகுந்த** இச் சொற்களை உன் வாக்கியங்களில் அமைத்துக் காட்டு. இவை என்ன எச்சங்கள் ?

கட்டுரை

1. இசை எவரையும் தன் வசப்படுத்தும். இப் பொருளை விரித்து ஒரு பாரா எழுது.

2. ஏமநாதனைக் காணுமல் மகிழ்ந்த பாணபத்திரர் கடவுள் முன்சென்று தன் நன்றியைச் செலுத்தியதாக ஒரு கட்டுரை கூறு.

14. வீர பர்ஸ்யூஸ்

கிரேக்க நாடும் நம் இந்தியாவைப்போல் மிகுந்த பழமை வாய்ந்தது. இங்குள்ள பழம் பெரும் நூல்களைப் போல் அங்கும் உண்டு. இந்தியாவிலிருந்த பெரிய வீரர்களைப் போன்ற வீரர்கள் அங்கும் இருந்தனர். அவர்களுள் ஒருவனுடைய பெயர் பர்ஸியூஸ். அவனைப் பற்றிய பல வரலாறுகள் கிரேக்க மொழியில் வழங்குகின்றன. அவற்றிலிருந்து பின்வரும் ஒரு வரலாற்றைக் காண்போம்.

அக்ரீஷஸ் என்றொரு மன்னன் இருந்தான். அவன் மிகவும் கொடியவன். அவனுக்கு **தானீ** என்ற ஒரு மகள் பிறந்தாள். ஒரு நாள் அசரீரி ஒன்று வானத்தில் தோன்றி அக்ரீஷஸை நோக்கி, "உன் மகள் வயிற்றில் ஒரு வீரன் பிறப்பான். அவன் புகழ் எல்லா உலகங்களிலும் பரவும்'' என்று கூறிற்று. இச்சொற்கள் அரசனுடைய பொறாமையைத் தூண்டின. அவன் கருவுற்றிருந்த தன் மகளை ஒரு பெட்டியில் அடைத்துக் கடலில் மிதக்க விட்டான். அப்பெட்டி கடவுளருளால் யாதொரு கேடும் அடையாமல் ஒரு தீவில் வந்து சேர்ந்தது.

அத்தீவின் அரசன் **பாலிடெக்டஸ்** என்றவன். அவனுடைய தம்பி **டிக்டிஸ்** என்றவன் அப்பெட்டியை எடுத்தான். அவனும் அவன் மனைவியும் **தானீயைத்** தம் வீட்டிற்கு அழைத்துச் சென்று அவளைப் பாதுகாத்தனர். அங்கே **பர்ஸ-ஸ்** பிறந்தான்.

டிக்டிஸ் அவனை மிகுந்த கவனத்துடன் வளர்த்தான். வீரனுக்கு வேண்டிய கல்வி யாவும் அவனுக்குக்

கொடுக்கப்பட்டன. அவன் உடலழகும் உளவன்மையும் பெற்ற வீர இளைஞனுன். அவன் தன் தாயிடம் அளவு கடந்த அன்பு காட்டி வந்தான்.

ஒரு நாள் அவன் ஒரு கப்பலேறி நெடுந்தூரம் சென்முன். அங்கே ஒரு தீவில் ஒரு கற்பாறை காணப்



பட்டது. **பர்ஸ-ஒஸ்** சற்றுக் களைப்பாற விரும்பி அதன்மீது ஏறி உட்கார்ந்தான். அச்சமயம் அவன்முன் அந்நாட்டுத் தெய்வங்களுள் ஒன்முன **அத்தீனி** என்ற தெய்வம் அங்கே தோன்றி அவனை நோக்கி, "பர்ஸ-ஒஸ்! உன்னை நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். பன்றிகளைப் போல் உண்டு, உறங்கிச் சுகமாகக் காலங்கழித்து இறக்க விரும்புகிருயா? அல்லது, உண்மையான ஆண் மகனுகி இன்னல்களைக் கண்டஞ்சாமல் எதையும்

எதிர்த்து நின்று வென்று புகழ்பெற விரும்புகிருயா ?" என்று வினவிற்று.

பர்ஸ-ஏஸ், " அம்மா ! நான் அஞ்சா நெஞ்சனய், உண்மைக்கும் புகழுக்குமே பாடுபட விரும்புகிறேன் " என்றுன். கடவுள், "அப்படியானல் நீ தொல்லைகள் பலவற்றிற்கும் உள்ளாக வேண்டும். நீ உண்மையாக உழைப்பாயானல் நான் எந்நேரத்தில் வேண்டுமான லும் வந்து உனக்கு உதவுவேன்" என்று கூறி மறைந்து போயிற்று.

பர்ஸ-ஏஸ் பெரிதும் வியந்தான். தான் கண்ட காட்சியை நினைந்து கொண்டே ஊர் திரும்பினன். அங்கே அவனுக்குப் பல இன்னல்கள் காத்திருந்தன. அந்நாட்டு அரசன் **பாலிடெக்டஸ்** பர்ஸஸிடம் பொருமை கொண்டு அவனையும் அவன் தாயையும் தொலைத்துவிட வழி தேடினன்.

அவன் **பர்ஸ-ஏஸை** நோக்கி, "பையா, நீ **மெதூஸா** என்ற அரக்கியின் தலையைக் கொண்டுவர வேண்டும். அவ்வாறு செய்வாயானல் உன்னை மிக மேன்மையாக நடத்துவேன். இல்லாவிடில் உன்னையும் உன் தாயையும் அடிமைகளாக்குவேன்", என்று கூறினன்.

மெதூஸா என்றவள் ஓர் அரக்கி. அவள் கூந்தலைச் சூழ்ந்து ஆயிரம் பாம்புகள் கிடந்தன. அவள் கண் களில் படும் எவரும் கல்லாவர். பர்ஸஸ் அவளருகில் கூடச் செல்லவியலாதென்று மன்னன் மதித்தான்.

பர்ஸஸ் மனவுறுதியுடன் புறப்பட்டான். அரசன் தன்னைக் கொல்லவே இச்சூழ்ச்சியைச் செய்தானென்

பது அவனுக்கு நன்ருய்த் தெரியும். என்ருலும் தன் உயிருக்குப் பெருந்தீங்கு விளைவதாயினும் துணிந்தே தீருவது என்று அவன் உறுதி கொண்டான். அவன் தன் தெய்வத்தை நினைத்தான்.

அத்தெய்வம் அவன் முன் தோன்றி, " தம்பி, உன் துணிவுக்காக நான் உன்னை மெச்சுகிறேன். நீ நீண்ட தூரம் செல்ல வேண்டும்; உன் முன்னே எவ்வளவோ இன்னல்கள் தோன்றும். அவற்றை யெல்லாம் பொறுத்துக்கொண்டு முன்னேற வேண்டும். **மெதூஸா** இப்பொழுது நோயினுல் துன்புற்றிருக்கிருள். அவள் கண்முன் நீ பட்டால் கல்லாவாய்.

"நான் உனக்கு ஒரு ஜதை செருப்புக்கள், ஒரு குல்லாய், ஒரு வாள், ஒரு கேடயம், ஓர் ஆட்டுத்தோல் ஆகியவற்றைத் தருகிறேன். செருப்புக்களைக் காலில் போட்டுக்கொண்டால் அவை நீ கருதிய இடத்துக்கு உன்னைத் தூக்கிச் செல்லும். குல்லாயைத் தலையில் அணிந்து கொண்டால் உன்னை ஒருவரும் காணமாட்டார்கள். நீ கேடயத்தால் உன் முகத்தை மறைத்துக் கொண்டு அவள் கழுத்தை வாளால் துணித்துவிடு. அவள் தலையை நான் கொடுத்திருக்கும் ஆட்டுத் தோலில் பொதிந்து கொண்டு திரும்பிவிடு" என்று கூறி அவற்றையும் கொடுத்தாள்.

பர்ஸூஸ் அவற்றைப் பெற்றுக் கொண்டு நேராக அரக்கியிருந்த இடத்திற்குச் சென்று அவள் தலையைக் கொய்து வந்தான். மன்னன் மிகவும் மகிழ்ந்து அவனுக்குப் பல சிறப்புக்களைச் செய்து அவனை மிக்க மரியாதையாக நடத்தி வரலானுன்.

பயிற்சி :

சொற்கள்

வரலாறு	பாதுகாத்து	தொல்லை	சூழ்ச்சி
அசரீரி	கவனம்	தொலை	துணிவு
பொருமை	கற்பாறை	காட்சி	மெச்சினேன்
தீவு	இன்னல்	அடிமை	துணிந்துவிடு

பழம் பெரும்நூல்கள் அளவுகடந்த மனவுறுதி
கருவற்றிருந்த அஞ்சாநெஞ்சன் முன்னேற

இவற்றிற்கு வேற்றுமை காட்டு;

தோல் X தோள். கொல் X கொள். தாயை X தயை. மேன்மை X மென்மை.

வினாக்கள்

1. கிரேக் நாடு எங்கே உள்ளது ?
2. அசரீரி என்ன சொல்லிற்று ?
3. அதனால் விளைந்தது என்ன ?
4. அத்தீனி பர்ஸியுஸை வினவியது யாது ?
5. மெதூஸா என்பவளின் இயல்புகளைக் கூறுக.
6. கடவுள் பர்ஸியூஸுக்கு அளித்தவை யாவை ?
7. அவற்றை எவ்வாறு உபயோகப் படுத்த வேண்டும் ?

இலக்கணம்

வேற்றுமை உருபுகள் :

நாய், நாயை, நாயால், நாய்க்கு, நாயினும், நாயினுடைய, நாயினிடம், நாயே.

இவை ஒவ்வொன்றுக்கும் உள்ள பொருள் வேற்றுமையைப் பார்.

ஐ, ஆல், கு, இன், உடைய, - இடம் இவை வேற்றுமை உருபுகள்.

நாய் என்பது எழுவாய் வேற்றுமை.

நாயே என்பது விளி வேற்றுமை.

கடைசி இரண்டு பாராக்களிலும் உள்ள வேற்றுமை உருபுகளைக் காட்டு.

கட்டுரை

1. வீரனுடைய இலக்கணங்களைக் கூறுக.

2. வீரர்களுக்குத் தெய்வம் துணை செய்யும் என்பதற்கு நீ அறிந்த வேறு ஏதேனும் ஒரு வரலாற்றைக் கூறு.

15. குறம்



குங்குமச்சந் தனக்குழம்பிற்
குழைத்துத்தரை மெழுகிக்
கோலமிட்டுக் குங்குலியக்
கொழும்புகையும் காட்டிச்
செங்கனக நவமணிகள்
திசை நான்கும் பரப்பித்
தென்மேலை மூலைதனில்
பிள்ளையார் வைத்துப்
பொங்குநறு மலர்கொ(டு)
ஐங்கரர்க்குச் சாத்திப்
புழுகுநெய்வார்த் திடு;
விளக்கு நிறைநாழிவைத்து
மங்கையருக் கரசி யெங்கள்
அங்கயற்கண் அமுதை
மனத்துள்வைத்து நினைத்தகுறி இனிச்சொலக்
கேளம்மே!

முன்நாழி முச்சிறங்கை நெல்லளந்து கொடுவா
முறத்திலொரு படிநெல்லை முன்னேவை அம்மே!

இந்நாழி நெல்லையுமுக் கூறுசெய்தோர் கூற்றை
இரட்டைப்பட எண்ணினபோ
தொற்றைப்பட்ட தம்மே!

உன்னுமுன் வேள்விமலைப் பிள்ளையார் வந்துதித்தார்,
உனக்கினியெண் ணினகரும
மிமைப்பினிற்கை கூடும்;

என்னுணை எங்கள்குலக் கன்னிமா ரறிய
எக்குறிதப் பினுந்தப்பா திக்குறிகாணம்மே!

—குமரகுருபரஸ்வாமிகள்.

குறிப்புரை

1. கனகம்-பொன். நவமணிகள் - ஒன்பது வகை இரத்தினங்கள். அறுகு - அறுகம் புல். நாழி - ஓர் அளவு. அங்கயர்க்கண் - மீனாட்சி. அமுது - அமுதம் போன்றவள்.

2. சிறங்கை - சிறு + அங்கை, உள்ளங்கை அளவு. ஒற்றைப்பட்டது - ஒரு நெல் மிஞ்சிற்று. உன்னு முன் - நினைப்பதற்கு முன். இமைப்பினில்-கண் கொட்டுவதற்கு முன்.

கட்டுரை

1. குறி சொல்லுவதற்குச் செய்யப்பட்ட முன் முயற்சிகளை வரிசையாகச் சொல்லு. ஒரு படத்திலும் அமைத்துக் காட்டு.

2. நெல்லைக் கொண்டு நல்ல குறி பார்ப்பது எப்படி?

16. மாமல்லபுரம்

தமிழகம் எப்பொழுது உண்டாயிற்று? தமிழ மக்கள் எப்பொழுது தோன்றினர்? தமிழ் மொழி எப்பொழுது பிறந்தது? இக்கேள்விகளுக்கு விடை எவராலும் சொல்ல இயல்வதில்லை. உலகத்தில் மிகப் பழைய நாடுகளுள் தமிழகம் ஒன்று. உலக மக்களுள் மிகப் பழையவர் தமிழர். உலக மொழிகளுள் மிகப் பழையது தமிழ் என்று மட்டும் நாம் கூறலாம்.

இத்தகைய பழமை வாய்ந்த தமிழகத்தின் வரலாறும் மிகப் பழமையானது. இதன் நீண்ட கதையில் எத்தனையோ அரசியல்கள் தோன்றி மறைந்துள்ளன. எத்தனையோ நகரங்கள் தோன்றி மறைந்துள்ளன. சில நகரங்கள் தாம் இருந்த இடங்களே காணமல் போய் விட்டன. அவற்றுள் மண்ணுக்குள் மறைந்துபோனவை சில; கடலில் முழுகிப் போனவை சில. சில நகரங்கள் தம் பண்டைப் பெருமையும் உருவமும் சிதைந்து சிற்றூர்களாக இப்பொழுதுவிளங்குகின்றன. சில அவ்வாறு சிதைந்து போனாலும் தம் பழைய பெருமையைக் காட்டச் சில அறிகுறிகளுடன் தோன்றுகின்றன. அவ்வாறு தோன்றும் இடங்களில் **மாமல்லபுரம்** ஒன்று.

மகாபலிபுரம், மாவலிபுரம், மல்லபுரி, மாமல்லபுரம் என்ற வெவ்வேறு பெயர்களுடன் அழைக்கப் படும் இவ்வூர் செங்கற்பட்டு ஜில்லாவிலே கடற்கரையோரத்தில் இப்பொழுது ஒரு சிற்றூராகக் காணப் படுகிறது. அதனைக்கண்டு வியப்படைந்து, அங்கே

தோன்றும் அருமையான காட்சிகளை ஆவலுடன் படம் பிடித்துச் செல்லும் அந்நிய நாட்டினர் ஆயிரக் கணக்கினராவர். அங்குச் செல்பவர், "மானிடர் அறிவு இவ்வளவு பெரியதோ? அவர்களுடைய கைத்திறன் இவ்வளவு ஆற்றலுடையதோ?" என்று வியவாமல் இரார்.



இவ்வாறு உலக மக்களைப் பிரமிக்கச் செய்யும் பெருமை அங்குள்ள கற்கோயில்களையே சாரும். கடற்கரையோரமாய் பெரிய பாறைகளும் சிறிய குன்றுகளும் அங்கே இருக்கின்றன. அந்த ஊருக்கெனவே அவை அமைந்தன போலவே அவை காணப்படுகின்றன. அவை யாவும் உறுதியான கருங்கல்லாலானவை. ஒரு காலத்தில் அவ்வூர் பெரிய நகரமாகவும் சிறந்த துறைமுகமாகவும் இருந்து வந்தது. அரசர்கள் அங்கிருந்து நாட்டை ஆண்டு வந்தார்கள். ஆகவே அவ்வரசர்களின் கவனம் அப்பாறைகளிற் சென்றன. அவர்கள் அவற்றைச் செதுக்கியும் குடைந்தும் பல

இரதங்களையும், கோவில்களையும், உருவங்களையும் அமைத்தார்கள். பல்லாயிரக் கணக்கான கல் தச்சர்கள் பல்லாண்டுகள் அங்கே உழைத்திருக்க வேண்டும். அவர்களின் உழைப்பின் பயனே இராஜ்யங்கள் அழிந்தும் நகரம் சிதைந்தும் தாம் நிலைகுலையாமல் அறிகுறிகளை அங்கே இன்றும் நிறுத்தி வைத்தது.

கி. பி. ஏழாம் நூற்றுண்டில் காஞ்சீபுரத்தில் பல்லவர்கள் என்ற ஒரு வமிசத்தினர் ஆண்டு வந்தனர்.



அவர்களுள் நரசிம்மவர்மன் என்றவன் ஒருவன். அவனுக்கு மாமல்லன் என்ற ஒரு பெயரும் உண்டு. அவன் காலத்திலேதான் இக்கோயில்களிற் பல குடைந்தெடுக்கப்பட்டன என்று கூறுகிருர்கள். ஆனால், அவ்வரசனுக்கு முன்னும் பின்னும் எழுந்த கல்வேலைகளை நாம் அங்குக் காண்கிறோம்.

மாமல்லபுரத்துக் காட்சிகளை நாம் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இரதங்கள் அல்லது கற்கோயில்கள், உருவங்கள் என்பன அப்பிரிவுகள் உருவங்களில்

சில சிங்கம், யானை, எருது போன்று பாறைகளைச் செதுக்கித் தனித்தனி உருவங்களாக அமைந்தவை சில; மானிட உருவங்களாகவும் பிற உயிர்ப் பொருள்களின் உருவங்களாகவும் பாறைகளின் ஓரங்களில் ஓவியங்கள் போல் செதுக்கி வைக்கப்பட்டவை பல.

அந்நிய நாட்டினர் மாமல்லபுரத்திற்கு **ஏழு கோயில்கள்** என்ற ஒரு பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது அங்கே காணப்படுவன ஐந்து ரதங்களே. அவை பஞ்ச பாண்டவர்களின் பெயர்களைக்கொண்டு இப்பொழுது விளங்குகின்றன.

அவற்றின் உருவங்களைப் படத்தில் காண்போம். (1) நகுல சகாதேவர் ரதம் (2) திரௌபதி ரதம் (3) அர்ச்சுன ரதம் (4) பீமரதம் (5) தர்மராஜா ரதம் என்பன அவை. இவற்றுள் நகுல சகாதேவர் ரதம் தனித்து நிற்கிறது. மற்றவை ஒரே கல்லில் குடையப்பட்டவை போன்று ஓரிடத்தில் அமைந்துள்ளன. இவை ஒவ்வொன்றையும் விரித்துச் சொல்ல இங்கே இடம் இல்லை. இவை சிறிய சிறிய கோயில்கள். பிற்காலத்தில் தென்னிந்தியக் கோயில்களில் அமைக்கப்பட்ட விக்கிரகம், விமானம், மண்டபம், கோபுரம் என்ற பகுதிகளெல்லாம் இவற்றைப் பார்த்தே எழுந்தன என்பர். இந்த ரதங்களிற் சில முழு வேலைப்பாடும் ஆகாமல் அரை குறையாகவும் நிற்கின்றன. ஆனால், உருவமற்ற பெரும் பாறைகளைச் செதுக்கியும், வெட்டியும், குடைந்தும் விமானங்கள் முதலியவற்றை அமைத்த சிற்பிகளின் திறத்தை வியவாமல் நாம் என்ன செய்ய இயலும்?

தருமராஜா ரதம் நான்கு மாடிகளைப் பெற்றுள்ளது. இதனில் பல உருவங்கள் காணப்படுகின்றன. இதற்குச் சுற்றுக்களும் உண்டு.

இவ்விரதங்களையன்றி அங்கே நாம் மகிஷாசுர மர்த்தனி மண்டபம், கிருஷ்ண மண்டபம், அர்ச்சுனன் தவம், பஞ்சபாண்டவ மண்டபம், கணேசர் கோயில், வராகசாமி கோயில் முதலிய பலவற்றை நாம் அங்கே காணலாம்.

துர்க்காதேவி மகிஷாசுரனை வதைப்பது உயிரோவியமாகக் காணப்படுகிறது. தேவி சிங்கவாக



னத்தின் மீதேறித் தன் இரு கைகளாலும் போர் புரிகிறுள்; எருமை முகத்தனுன அரக்கன் தன் கையில் கதையைக்கொண்டும் பின்வாங்குகிறுன். இரு புறத்தினர் படைகளும் போர்புரிகின்றன.

அர்ச்சுனன் தவம் சிற்பவேலைக்குச் சிகரம் வைத்ததுபோல் விளங்குகிறது. இச்சிற்பம் 96 அடி நீளமும் 43 அடி அகலமும் உள்ளது. இதனிற் காணப்படும் உருவங்களுக்குக் கணக்கில்லை. ஒரு பெரிய யானையின் கொம்புகளுக்குக் கீழே ஒரு பூனை தவம் புரிவதையும் அதனைக்கண்டு எலிகள் அச்சமில்லாமல் விளையாடுவதையும் காணும்போது சிற்பியின் நகைச் சுவை நமக்குப் புலனாகிறது.

இன்னும் இவ்வூரில் காணவேண்டிய இடங்கள் பல உண்டு. கடற்கரைக் கோயில் என்பது அவற்றுள் ஒன்று. இது மிக அழகாகக் கட்டப்பட்ட ஒரு கற் கோயில். இதைப் போன்று வேறு சில கோயில்களும் இருந்தனவென்றும் அவை கடலில் முழுகிவிட்டன என்றும் கூறுகிறார்கள். இதனுள் பல கடவுள் உருவங்கள் காணப்படுகின்றன.

இவ்வளவு அரிய வேலைகளைச் செய்த நம் முன்னோர்களின் பெருமையை நாம் எவ்வாறு கொண்டாடுவோம்? அழகுக்கும் கலைக்குமாகவே அவர்கள் தம் ஆயுள்களையெல்லாம் ஒப்படைத்தார்கள். அவர்களின் இணையற்ற சிறப்புக்களை அழிந்தன போக எஞ்சியிருக்கும் சில நினைவுக்குறிகள் நமக்கு அறிவுறுத்துகின்றன. அவையேனும் நீடூழி வாழ்வனவாக.

பயிற்சி

பிரமிக்க கவனம் சிதை விமானம் சிற்பி
சாரும் செதுக்கு வமிசத்தினர் மண்டபம் சுற்று
கருங்கல் குடை ஓவியம் கோபுரம் ஆயுள்
வெவ்வேறு கற்கோவில் நிலைகுலையாமல் இணையற்ற
கைத்திறன் துறைமுகம் முன்னும் பின்னும் நீடூழி

வெட்டு, செதுக்கு, குடை, அடுக்கு - இவற்றின் பொருள் வேற்றுமை என்ன ?

இணையற்ற - இதனைப் போல அற்ற என்றதைப் பின்வரும் அடிச் சொற்களோடு கூட்டுக....

எண் - கணக்கு. எல்லை.

வினாக்கள்

1. மகாபலிபுரம் எங்கே இருக்கிறது ?

2. அங்குள்ள கோயில்கள் எப்படிக் கட்டப் பட்டுள்ளன ?

3. கோயிலின் பல பகுதிகளையும் கூறுக.

4. பஞ்சபாண்டவர்கள் யாவர் ?

5. மகிஷாசுரன் யார் ? அவன் யாரால் கொல்லப் பட்டான் ?

6. படங்களில் காணும் காட்சிகள் யாவை ?

இலக்கணம்

மகாபலிபுரத்தில் நாம் பல கோயில்களைக் காண்கிறோம். இவ்வாக்கியத்தில் 3 பெயர்ச் சொற்கள் இருக் கின்றன. ஒவ்வொரு பெயர்ச் சொற்கும் வகை, எண், பால், இடம், வேற்றுமை, முடிவு இவற்றைக் கூறு.

கட்டுரை

நீ மகாபலிபுரம் போய் அங்குள்ள கலைப் பொருள் களைக் கண்டதாக உன் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

17. சநாதன்

இன்றைக்கு ஏறக்குறைய எண்பது ஆண்டுகட்கு முன் ஓரிஸ்ஸாவில் கொடிய பஞ்சமொன்று வந்தது. பன்னிரண்டாண்டுகளுக்குச் சேர்ந்தாற்போல் வானம் ஒருதுளி மழையைக்கூடக் காட்டவில்லை. பயிர் பச்சைகள் எங்குமேயில்லை. மரங்களெல்லாம் தீய்ந்து போயின. மக்கள் வாடிவதங்கினர். இக்காலத்தில்போலப் போக்குவரவு வசதிகள் அக்காலத்தில் இல்லை.

சநாதன் ஒரு சிறிய ஊரில் வசித்து வந்தான். அவனுக்கு வயது பன்னிரண்டே இருக்கும். அவனுக்கொரு தம்பியுமுண்டு. அவன் இரு பெற்றோர்களும் அக் குழந்தைகளைத் தங்கள் கண்கள்போல் பார்த்து வந்தனர். அவர்கள் ஏழைகள். அவ்வூரே ஏழை மக்கள் நிறைந்த ஊர்.

பஞ்சம் சநாதன் ஊரையும் வாட்டத் தொடங்கிற்று. உணவுப் பொருள்கள் கிடைப்பதே அரிதாயிற்று. பொன் கொடுத்தாலும் அரிசி கிடைப்பதில்லை. சநாதன் தாயின் உடலிலிருந்த சில நகைகளும் விலை போயின. வீட்டிலுள்ள பாத்திரம் பண்டங்களும் தொலைந்தன.

சநாதனுடைய தந்தை பட்டினியால் பரிதவிக்கும் மனைவியையும் குழந்தைகளையும் காணமுடியாமல் தத்தளித்தார். "நான் ஒரு யாத்திரைக்குப் போய் வருகிறேன்" என்று சொல்லி அவர் வெளியேறினார். அவர் எங்குச் சென்றாரோ? எவரும் அறியார்.

சநாதன் தன் குடும்பத்தின் தொல்லையைக் காணச் சகியாமல் வீட்டைவிட்டு வெளியே சென்று

மாலையில்தான் திரும்புவான். அவன் தாயினிடம் தான் உண்டுவிட்டதாகக் கூறி இரவில் உறங்குவான். ஊர் புறங்களிலுள்ள வேர்கள் சருகுகள் இவைகளைத் தாய் பொறுக்கிவந்து தானும் உண்டு தன் சிறிய மகனுக்கும் கொடுத்துவந்தாள். சில நாட்களில் அவளால் எழுந்து நடக்கக்கூட முடியவில்லை. சருகு உணவும் நின்றது.

சநாதன் எங்காவது போய் உணவு கொண்டு வருவதென்று வெளியேறினன், பல ஊர்கள் சுற்றி



அலைந்தான். அவனுக்கு ஒரு பிடி உணவு உதவுவார் எவரும் இல்லை. இவ்வாறு மூன்று நாட்கள் அலைந்து மனம் சலித்துக் கால் ஓய்ந்து வீடு திரும்பினன். வரும் வழியில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து அயர்ந்து விட்டான்.

அச்சமயம் வழிப்போக்காகச் சென்ற ஒரு கிழவி சநாதன் உறங்கிக் கொண்டிருந்த இடத்திற்கு அருகில்

அடுப்பு மூட்டிச் சோறு சமைத்துக் கொண்டிருந்தாள். சோற்றின் வாசனை சநாதன் நாசியில் ஏறியவுடன் அவன் விழித்தெழுந்தான். அவனுல் நடக்கவும் கூட வில்லை. அவன் மெதுவாகக் கிழவியிடம் ஊர்ந்து சென்று தனக்குச் சிறிதளவு சோறு தரும்படி வேண்டி ஞன். கிழவியும் இரக்கமுற்றுச் சிறிதளவு உணவு கொடுத்தாள்.

அவன் அதை அங்கே உண்ணவில்லை. ஒரு சிறு மூட்டையாக அதனைக் கட்டிக்கொண்டு அவன் தன் வீடு நோக்கிப் புறப்படலாஞன். நடக்கக்கூடவில்லை; பல்லைக் கடித்துக்கொண்டு நகர்ந்தான். ஊருக்கு வெளி யில் ஓர் ஆலமரத்தினடியில் வந்து சேர்ந்தான். அதன் மேல் அவனுல் ஓர் அடிகூட எடுத்துவைக்க முடிய வில்லை. அப்படியே உட்கார்ந்தான்; கண்கள் மூடிக் கொண்டன; மூடினபடியே சாய்ந்தான்.

வெகுநேரம் ஆயிற்று. இருட்டும் வந்தது. அச் சமயம் அவ்வூரார் இருவர் அவ்வழியே வந்தனர். ஆல மரத்தடியில் சநாதன் உறங்குவதைக் கண்டு அவனரு கில் சென்று அவனை எழுப்பினர். அவன் எழவில்லை. அவன் மடியில் கட்டிய சோற்று மூட்டையுடன் உயிர் துறந்தான் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

பயிற்சி:

சொற்கள்

பஞ்சம்	பரிதவிக்கும்	வெளியேறிஞர்	குடும்பம்	சலித்து
தீய்ந்து	தத்தளிக்கும்	யாத்திரை	சகியாமல்	ஒய்ந்து
ஏறக்குறைய	போக்குவரவுவசதிகள்	விலை போயின		
வாடிவதங்கினர்	உணவுப் பொருள்கள்	வழிப்போக்கு		

விலை என்ற சொல்லிலிருந்து விலையேற்றம், விலையாயிற்று, விலைவாசி முதலிய சொற்கள் உண்டாகின்றன.

அதேமாதிரி தலை, கை இச் சொற்களிலிருந்து வரக்கூடிய சொற்களை ஆராய்ந்து எழுதுக.

வினாக்கள்

1. பஞ்சம் எவ்வாறு உண்டாகிறது?
2. சநாதன் தந்தை எங்கே சென்றார்?
3. சநாதன் தாய் எவ்வாறு பிழைத்து வந்தாள்?

இலக்கணம்

பின்வரும் வாக்கியங்களிலுள்ள சொற்பிழைகளைத் திருத்துக :—

(1) சுக்குக் கஷாயம் வயிருக்கு நல்லது.
(2) சநாதன் ஒரு சிரிய ஊரில் வாழ்ந்தான்.
(3) அவன் வீட்டைவிட்டு வெளியேரினன்.
(4) நீ செய்தது ரொம்வும் சரி.
(5) வரவும் சிலவும் சரியாயின.

கட்டுரை

சநாதன் தான் இறக்கும்போது என்ன நினைத்திருக்கக்கூடும்?

சநாதன் சாவைக் கேட்ட தாய் என்ன சொல்லி வருந்தியிருப்பாள்?

18. ஏழு பெரு விந்தைகள்

இயற்கை விநோதங்கள் உலகத்தில் எத்தனையோ இருக்க, மானிடம் தன் அறிவால் இயற்றிய செயற்கை விநோதங்களும் பல உண்டு. பண்டைக்காலத்து வியக்கத்தக்க மானிடச் செயல்களில் எழில் நிறைந்த ஏழினைச் சுட்டி, 'உலகப் பெருவிந்தைகள்' என்று அக்கால மக்கள் கூறிவந்தனர். ஆனால் அவற்றிற் பெரும்பாலன இன்று அழிந்துவிட்டன. எனினும் மக்களின் கருத்தில் அவற்றின் பெருமை குறையவில்லை. அவற்றைப் பற்றி இங்குச் சிறிது காண்போம்.



மேற்கே பாபிலோனியா என்ற ஒரு நாடு இருக்கிறது. அங்கே இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னே **நேபுகாத்நேச்சார்** என்ற ஒரு மன்னன் இருந்தான். அவனுடைய மனைவி மலைநாட்டினள். பாபிலோனியா ஒரு சமவெளி நாடு. அவள் மலைவளம் பார்த்துப் பார்த்துப் பழகினவளாகையால், ஒரு குன்று கூடக் காணக் கிடைக்காத பாபிலோனியாவைக் கண்டு சலிப்புற்றாள். அக்குறையை நிரப்ப அரசன் ஒரு மாளிகை பூந்தோட்டம் அவளுக்காக அமைக்கலானான்.


மாடிமேல் மாடியாக அத்தோட்டத்தை முந்நூறு அடி உயரத்தில் அமைத்தான். செடிகள், கொடிகள், மரங்கள் சோலைகள், அருவிகள், ஓடைகள் பலவற்றையும் அவன் அங்கே உண்டு பண்ணினான். பல எந்திரங்களைக்கொண்டு அவற்றிற்கு அவன் நீர் பாய்ச்சச் செய்தான். அரசி அத்தோட்டத்தில் அலைந்து தன் காலத்தைக் கடத்தினாள். இது உலக விந்தைகளில் முதன்மையானது. ஆனால் அது இன்று காணப்படுவதற்கில்லை.



இரண்டாவதாகக் கொண்டாடப்பட்டு வந்தது கிரேக்க நாட்டில் ஒலிம்பியா என்ற இடத்திலமைந்த ஒரு தெய்வ உருவம். அதனைப் **பைடியஸ்** என்ற சிற்பி அமைத்தார். அதன் உயரம் அறுபது அடி. அது பொன், தந்தம் இவற்றால் செய்யப்பட்டிருந்தது. அதன் கம்பீரமான தோற்றத்தைக் காண உலக மக்கள் அவாவி அவ்வூருக்குச் செல்வர். அதுவும் அழிந்தது.


ஆசியா மைனர் என்ற நாட்டை ஒரு முறை கிரேக்கர்கள் கைப்பற்றினார்கள். அங்கே எபீஸஸ் என்ற ஊரில் அவர்கள் ஒரு கோயில் அமைத்தார்கள்.

அதனை அவர்கள் ஐந்து முறை புதுக்கிப் பெரிதாக்கினார்கள். இவ்வாறு அக்கோயிலை முற்றிலும் கட்டி முடிக்கப் பல ஆண்டுகள் பிடித்தன. அதன் பெருமை உலகெங்கும் பரந்தது. ஆனால் சில அயல் நாட்டினர் வந்து அவ்வூரைக் கைப்பற்றியபோது அவர்கள் அதனை இடித்துத் தரையோடு தரையாக்கினர். அதனை அதன் சில பகுதிகளை இன்று இலண்டன் காட்சிச் சாலையில் காணலாம். இக்கோயிலின் காலம் ஏறக்குறைய இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் என்பர்.



அதே காலத்தில் ஆசியா மைனரின் மற்றொரு பகுதியில் **டிரஸோலஸ்** என்னும் சிற்றரசன் ஆட்சிபுரிந்து வந்தான். அவன் இறந்தபோது அவன் உடலைப் புதைத்த இடத்தில் அவன் மனைவி ஒரு சமாதி எழுப்பினாள். அக்காலத்தில் விளங்கிய பெரிய சிற்பிகள் எல்லோரையும் அவள் அழைத்து அச்சமாதியைக் கட்டி முடித்தாள். அவர்கள் அரசனின் சவக்குழிக்கு மேலே ஒரு நீண்ட சதுரமான மேடையைக் கட்டினார்கள். அதன்மீது வேலைப்பாடமைந்த பல தூண்களை நிறுத்தி, அவற்றின்மீது ஒரு தளம் பரப்பினார்கள். அத்தளத்தின் மீது நான்கு குதிரைகள் பூட்டிய ஒரு தேர் அமைக்கப்

பெற்றது. அத்தேரின் தட்டில் அரசன் அரசி இவர்களின் உருவங்கள் வைக்கப்பட்டன. அந்தச் சமாதிக்கு **மாஸோலியம்** என்று பெயரிடப்பட்டது. அதைப் பின்பற்றி கிறிஸ்தவர்கள் இன்றைக்கும் தாம் கட்டும்





சமாதிக் கட்டடத்திற்கு மாஸோலியம் என்ற பெயரையே இடுகிறார்கள். இது நான்காவது விந்தை. இதுவும் காலத்தால் அழிவுற்றது.

ஐந்தாவது விந்தை ரோட்ஸ் என்னும் தீவில் கட்டப்பட்ட கதிரவனின் உருவம். அது கிரேக்கர்களுடைய வேலையே. அதன் உயரம் நூறு அடி. செம்பையும் ஈயத்தையும் உருக்கி அவ்வுருவத்தை அவர்கள் வார்த்தார்கள். அதனை அந்நகரத் துறை

முகத்தின் வாயிலில் அவர்கள் வைத்தார்கள். அவவாறு அவ்வூரைக் கதிரவன் அறுபதாண்டுகளே காத்து வந்தான். அதன் பிறகு அங்கே ஒரு பூகம்பம் உண்டாக அஃது ஆடிச் சரிந்து வீழுந்து விட்டது. அதனை மக்கள் துண்டாடி வெண்கல விலைக்கு விற்றுக் கொண்டார்கள். என்னே கொடுமை!


எகிப்து தேசத்திலே பாலோஸ் என்ற தீவில் அதன் அரசன் ஒரு கலங்கரை விளக்கம் அமைத்தான். அது ஐந்நூறு அடி உயரமுள்ளது; அடி முதல் முடிவரையில் சலவைக் கற்களால் அது செய்யப்பட்டிருந்தது. அதன் மீது வெயில் படும் போது ஒரே ஒளி வடிவாய் அது திகழும். இவ்வாறு இரவும் பகலும், ஒளி வீசிக்கொண்டிருந்த அவ்விளக்கும் இன்று இடந்தெரியாமல் போய்விட்டது.



பண்டை உலக அற்புதங்களுள் இன்றும் அழியாமல் நிற்பவை எகிப்திலுள்ள **பிரமிட்** என்ற கட்டடங்களே. சரித்திர காலத்துக்கு முன்னே எகிப்து மன்னர்களை அடக்கம் செய்து அவ்விடங்களின் மேல் கட்டப்பட்டவைகளே இப்பிரமிட்டுக்கள். இறந்து

போன உடல்களை வாசனைப் பொருள்களால் நிரப்பி, அவர்களுக்கு விருப்பமான பொருள்களை அருகில் வைத்துப் புதைப்பார்கள். மனைவியர், ஏவலாளர், தேர் முதலிய வாகனங்கள் குதிரைகள், அணிகலன்கள், உணவுப் பொருள்கள் ஆகிய பலவும் அவர்களுடன் புதைக்கப்படுமாம். இறந்து போனவர் மறு உலகத்தில் அவற்றை யெல்லாம் நுகர்வதற்காகவே அவ்வாறு செய்தனராம்.

இப்பிரமிட்டுக்கள் அடிப்புறம் அகன்று சதுர அளவில் இருக்கும். உச்சிப்புறம் குறுகி முனையாக இருக்கும். இவ்வாறு எகிப்தில் ஏறக்குறைய எழுபது பிரமிட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றுள் மிகப் பெரியதன் அடிப்புறம் ஒரு பக்கம் ஒன்றரைக் கல் தூர அளவு நீண்டும், உயரம் நானூற்றெண்பத்தோரடியும் உள்ளன.



இத்தகைய பிரமிட்டுக்களிற் பல நாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பர். உலகத்துப் பழம் கட்டடங்களுள் இன்றும் உள்ள இவைகளே மிகச் சிறந்தவை.

இவ்வாறு பழைய விந்தைகளை ஏழென மக்கள் கணக்கிட்டிருந்தாலும் இவற்றைவிட விந்தையானவை இன்னும் எத்தனையோ இருந்து அழிந்து போயிருக்க வேண்டும். புதிய விஞ்ஞான உலகில் காணப்படும் விந்தையும் அளவிலடங்கா. இவை யாவும் மனிதனின் ஆற்றலையும் புலப்படுத்துபவை.

பயிற்சி :

சொற்கள்

இயற்கை, செயற்கை, துண்டாடி, அற்புதம், வியக்கத்தக்க, பெரும்பாலான, நுகர்தற்குரிய

சலிப்புற்றாள், எந்திரங்கள், அடக்கம், முனை, மலைவளம், கலங்கரை விளக்கம்

அவாவி, பகைஞர், திகழும்

தளம், கதிரவன், உச்சி, விஞ்ஞான உலகு, அளவிலடங்கா

ஆட்சி, கல்வி, காட்சி, தோற்றம்—இவை எவற்றினடியாகப் பிறந்தவை ?

வினாக்கள்

1. நேபுகாத் நேச்சர் கட்டிய தோட்டம் எத்தகையது ?
2. எபேஸஸ் ஊர்க்கோயில் எவ்வாறு அழிந்தது ?
3. மாஸோலியம் என்ற பெயர் எவ்வாறு உண்டாயிற்று ?
4. கதிரவன் காத்து வந்த ஊர் எது ?
5. எகிப்தியர் தம் இறந்த மக்களை எவ்வாறு புதைத்து வந்தனர் ?

இலக்கணம்

பின்வரும் வாக்கியங்களிலுள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்துக :

(1) சிற்பிகள் கோயிலைக் கட்டி முடித்தான்.
(2) உலக அற்புதங்கள் ஏழாகும் ; அதாவது.........
(3) அரசா தன் மனைவிக்காக ஒரு தோட்டம் இயற்றினர்.
(4) அரசன் மனைவி ஒரு சமாதி எழுப்பினள்.

19. இறவாதவர் எவர்?

நாடகம்.

காட்சி—1

புத்த பகவான் ஓர் அரச மரத்தடியில் அமர்ந்திருக்கிறார். ஒருத்தி இறந்த தன் மகவுடன் அவரை வந்து காண்கிறாள்.

காலம் ; காலை.

பெண் : ஐயா, எனக்கு இந்த மகவு ஒன்றே ஒன்று தான் ஐயா ! அநியாயமாய் அஃது நேற்று இரவு இறந்துவிட்டதையா ? ஒரு நோயும் அதற்கில்லை, ஐயா.

புத்தர் : நான் மிகவும் வருந்துகிறேன். துன்பத்தை ஆற்றிக்கொள். அழாதே ?

பெண் : நான் எவ்வாறு ஆற்றிக் கொள்வேன் ? நான் அநாதை ! எனக்கு உதவி யாரும் இல்லையே ! இதன் முகத்தைக் கண்டு ஆறுதல் பெறலா மென்றிருந்தேனே ! என்ன செய்வேன் ?

புத்தர் : யார் என்ன செய்ய முடியும்? அவரவர் வினைப்பயனை அவரவர் தாமே நுகரவேண்டும். ஆண்டாண்டு புரண்டாலும் மாண்டார் வருவாரோ ?

பெண் : தாங்களே இப்படிக் கூறினால் நான் என்ன செய்வேன் ! இக்குழந்தையைப் பெற நான் எவ்வளவு நோன்பு நோற்றேன். எத்தனை கோயில்களில் சென்று தவம் கிடந்தேன் ! என் தலைவிதி இப்படியா இருக்கும் ?

புத்தர் : தாயே ! வரும் துன்பம் வந்தே தீரும் ! அதைத் தடுக்க எவராலும் இயலாது. உன் துன்பம் மிகப் பெரியதே ! என்றாலும் என்ன செய்வது ? பொறுத்துக்கொள். இறந்த குழந்தைக்குச்



செய்ய வேண்டியதைச் செய். வீட்டுக்குப் போ.

பெண் : ஸ்வாமி, தாங்கள் இப்படிச் சொல்லலாகாது. தாங்கள் சாதாரண மானிடர் அல்லர்

தெய்வமே எங்களைக் காக்கத் தங்கள் உருவத்தில் எழுந்தருளியிருக்கிறது. என்னைக் காப்பாற்றுங்கள். என் குழந்தையை எழுப்பித் தாருங்கள். மாட்டீர்களானால் என் உயிரைத் தங்கள் காலடியிலேயே விடுகின்றேன். நான் ஏமாந்து வீடு செல்லேன்.

புத்தர் : பெண்ணே! நான் கூறுவதைக் கவனமாய்க் கேள். நான் தெய்வம் அல்லேன்; உன்னைப்போல ஒரு மானிடனே. தெய்வமே யானாலும் இறந்தவர்களை எழுப்ப முடியாது. பிறப்பதும் சாவதும் உலக இயற்கை. இதைத் தடுப்பவர் எவரும் இலர். ஆகவே, வீணாக வருந்தாதே. போய் வா.

பெண் : நீங்கள் என்ன சொன்னாலும் நம்பேன். நீங்கள் என்பால் கருணை கொள்ளவில்லை யென்றுதான் கூறவேண்டும். உங்களால் ஆகாதது ஒன்றுமுண்டோ? என் பிள்ளையை எழுப்பித்தான் தரவேண்டும்.

புத்தர் : நல்லது. நீ மிகுந்த பிடிவாதக்காரியாய் இருக்கின்றாய். சரி, நான் சொல்வதைக்கேள். ஒரு பிடி கடுகு வாங்கி வா. அதை.......

பெண் : அப்படிச்சொல்லுங்கள். ஒரு பிடி என்ன? ஒரு படி கொண்டு வருகிறேன்.

புத்தர் : அம்மா, நான் பேசி முடிப்பதற்குள் நீ பேசுகிறாயே! எனக்கு ஒரு பிடி கடுகு போதும் ஆனால்......

பெண் : ஆனால் என்ன?

புத்தர் : நீ கடுகு வாங்கும் வீட்டில் ஒருவரும் இறந்திருக்கக் கூடாது. அப்படிப் பார்த்து வாங்கி வரவேண்டும். இல்லாவிட்டால் உன் முயற்சி வீணாகும்.

பெண் : என் பிள்ளைக்காக நான் எது வேண்டுமானாலும் செய்வேன். எங்குவேண்டுமானாலும் செல்வேன். இதோ ஒரு நொடியில் வந்து விடுகிறேன், ஐயா !

புத்தர் : போய் வா.

(பெண் போகிறாள்)

காட்சி—2

அப் பெண் அருகிலுள்ள ஊரினுள் புகுந்து வீடு தோறும் கேட்கிறாள்.

காலம்: நடுப்பகல்.

பெண் : அம்மா ! ஒரு பிடி கடுகு வேண்டுமம்மா ! இறந்த என் பிள்ளையை எழுப்பித்தர ஒரு மந்திர வாதி வாங்கி வரச் சொன்னார் அம்மா.

வீட்டுக்காரி : ஐயோ பாவம் ! இதோ தருகிறேன் !

பெண் : ஆனால் உங்கள் வீட்டில் எவரும் இறந்திருக்கக் கூடாது.

வீட்டுக்காரி : அதென்ன அம்மா ! என் தாய் இறந்து ஒரு மாதங்கூட ஆகவில்லையே.

பெண் : அப்படியானால் வேண்டாம். அடுத்த வீடு போகிறேன்.

(அடுத்த வீடு போகிறாள்)

பெண் : அம்மா, ஒரு பிடி கடுகு வேண்டும். ஆனால் உங்கள் வீட்டில் ஒருவரும் செத்திருக்கக் கூடாது.

வீட்டுக்காரி : இதென்ன விந்தை! என் தகப்பன் இறந்து இரண்டு மாதங்களாயின. குற்றமில்லை யென்றால் தருகிறேன்.

பெண் : வேண்டாம், அம்மா.

(அடுத்த வீடு போகிறாள்)

பெண் : அம்மா, உங்கள் வீட்டில் யாரும் இறக்க வில்லையே, அம்மா.

வீட்டுக்காரி : எங்கள் வீட்டில் தான் சாவு குடிபுகுந் திருக்கிறதே! இந்த ஒரு வருஷத்திற்குள் எத்தனை சாவுகள்! ஏன் என் வயிற்றெரிச்சலை எழுப் புகிறாய்? போ.

(பெண் அடுத்த வீடு போகிறாள்)

பெண் : அம்மா, உங்கள் வீட்டில் யாரும் இறவா திருந்தால் ஒரு பிடி கடுகு தாருங்கள். வீடு தோறும் ஏறி ஏறி என் கால்கள் தேய்ந்து போயின! சாகாத வீடே இந்த ஊரில் இல்லையா?

வீட்டுக்காரி : நீ என்ன இந்த உலகத்தவளே அல்லவா? உன் வீட்டில் உன் தகப்பன், தாய், மாமன், மாமி, அண்ணன், தம்பி ஒருவரும் சாக வில்லையா? சாவுதான் நம்மோடு பிறந்தது ஆயிற்றே. சாவுக்கு மருந்துண்டோ? அதை நீக்கத்தான் யாராலும் முடியுமா?

பெண் : அம்மா, உண்மையை அறிந்தேன். வருத்தப் படாதவர் ஒருவருமில்லை. நான் மட்டும் வருந்துவது ஏனோ? நான் பகவானிடம் இந்தப் பிள்ளையுடன் போகேன். இதைக் கொண்டு போய்ப் புதைத்து விடுகிறேன்.

(போகிறாள்)

காட்சி—3

அப்பெண் புத்தபகவானைக் காண்கிறாள்.
காலம் : மாலை

புத்தர் : தாயே! குழந்தை எங்கே? கடுகு கிடைத்ததா?

பெண் : சுவாமி! அறிவு பெற்றேன். சாவு மக்களுக்கு இயல்பு. சாவில்லாத வீடே உலகில் இல்லை.

புத்தர் : பெண்ணே! நீ உண்மையில் அறிவு பெற்றாய். உனக்கு நற்காலம் உண்டாவதாகுக.

பெண் : பகவானே! எனக்கு நல் உபதேசம் தர வேண்டும். துக்கமில்லாமல் வாழ வழி என்ன?

புத்தர் : வழி எளிது. ஆனால் அதைக் கடைப்பிடிப்பதுதான் அரிது. நீ நல்ல எண்ணமும், நல்ல பேச்சும், நல்ல செயலும் உடையவளாய் இரு. ஒருவருக்கும் தீங்கு நினையாதே. எல்லா உயிர்களிடமும் அன்பாய் இரு. ஒன்றிலும் கெட்ட ஆசை கொள்ளாதே. உன் கடமையைச் செய். உனக்குத் துக்கம் உண்டாகாது.

பெண் : ஐயா, என்னால் முடிந்தவற்றைச் செய்வேன். போய்வருகிறேன். வணக்கம்.

(போகிறாள்.)

பயிற்சி :

சொற்கள்

மகவு	ஆற்றிக்கொள்	ஏமாந்து	பகவான்
அநாதை	நுகர	பிடிவாதக்காரி	உபதேசம்
ஆறுதல்	நோன்பு	மந்திரவாதி	துக்கம்
வினைப்பயனை		தலைவிதி	வயிற்றெரிச்சல்
ஆண்டாண்டு		காலடி	நற்காலம்

பின்வரும் கூட்டுச் சொற்களைப் பிரித்தெழுது.

சாவில்லாதது, மற்றொன்று, ஒவ்வொருவர்.

வினாக்கள்

1. அவள் புத்தரை ஒரு தெய்வமாகக் கருதியது ஏன்?
2. அதற்கு அவர் சொன்னதென்ன?
3. கடுகு வாங்கிவர அவர் வைத்த நிபந்தனை எது?

இலக்கணம்

பின்வரும் வாக்கியங்களில் உரிய இடங்களில் ஒற்றுக்களை இடுக.

1. தாங்கள் இப்படிச் சொல்லலாகாது.
2. இந்தக் குழந்தை இறந்து போயிற்று.
3. தாங்களே இதனை கிளப்பித் தரவேண்டும்.
4. எனக்கு புண்ணியம் இல்லை.
5. அவள் தன் வீடு நோக்கிப் புறப்பட்டாள்.

கட்டுரை

தாய் பகவானைப் பார்க்கும்போது எவ்வித நிலையில் இருந்தாள் என்பதையும் முடிவில் அவள் எவ்வாறு மாறினாள் என்பதையும் அதற்குக் காரணம் யாது என்பதையும் ஒரு பாராவில் சுருக்கி எழுதுக.


20. ஆடை

'ஆடை இல்லாதவன் அரை மனிதன்' என்பது ஒரு பழமொழி. மனிதனுக்கு நாகரிகம் தோன்றினது முதல் அவன் ஆடையணிந்து வருகிறான். குளிரிலிருந்தும் வெயிலிலிருந்தும் காப்பதற்குத் தாவரங்களுக்கும், பறவை, விலங்கு, முதலியவற்றிற்கும் இயற்கையிலே உதவிகள் அமைந்திருக்கின்றன. மனிதனுக்கோ அப்படியில்லை. ஆகவே அவன் வெப்ப தட்ப காலங்களில் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள மேற்போர்வை ஏதோ ஒன்றை நாடவேண்டியதாயிற்று.

முதலில் தழைகள், பட்டைகள், தோல்கள் முதலியன அவனுக்கு ஆடையாக உதவின. பட்டைகளை உரிப்பதிலிருந்து மெல்லிய நார்களின் பயனை அவன் அறிந்து கொண்டான். தோலின் உபயோகத்தை அறிந்ததிலிருந்து அதன்மேலிருக்கும் உரோமத்தின் உபயோகத்தையும் அவன் அறிந்திருக்கவேண்டும். கோரை முதலியவற்றை உரித்தும் அவன் ஆடை பின்னக் கற்றுக்கொண்டான். இவ்வாறு நாளடைவில் அவன் அறிவு வளர வளரப் பருத்தி, பட்டு முதலியவற்றின் உபயோகங்கள் அவனுக்குத் தெரியலாயின.

நமது இந்தியா மிகப் பழங்காலம் முதற்கொண்டு ஆடைக்குப் பெயர் போனதாக இருந்தது. இந்தியாவில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே இருந்த நகரங்கள் பல மண்ணுக்குள் புதைந்து போய் விட்டன. அவற்றுள் மொகிஞ்சோ-தாரோ, ஹரப்பா என்ற

இடங்களை அண்மையில் தோண்டிப் பார்த்தார்கள். அங்கே அக்காலத்து ஆடைகளிற் பல காணப்பட்டன. முன்னொரு பாடத்தில் எகிப்து நாட்டுப் பிரமிட்டுகளைப் பற்றிப் படித்தோமல்லவா? அவற்றுள் புதைக்கப் பட்ட பிணங்களின் உடல்களில் இந்திய ஆடைகள் சுற்றப்பட்டிருக்கின்றனவாம்.



கைத்தறி

மிகப் பழங்காலத்துத் தமிழ் நூல்களிலிருந்து அக்காலத் தமிழருக்கு மிக மெல்லிய ஆடைகளை நெய்யத் தெரிந்திருந்தது என்பதை அறிகிறோம். பாலின் நுரை போன்ற ஆடைகளையும் அவர்கள் அணிந்தார் களென்றும் அவற்றில் பூவேலை செய்யவும் கற்றுக் கொண்டிருந்தார்களென்றும் அந்நூல்களிலிருந்து நாம் தெரிந்துகொள்கிறோம். பட்டு, பருத்தி, உரோமம் இவற்றால் அவர்கள் ஆடைகள் நெய்ததோடு ஒருவகை

எலி மயிராலும் ஆடை நெய்துவந்தார்களென்பது நமக்குத் தெரிய வருகிறது.

நூல் நூற்றல் பெரும்பாலும், பெண்டிர்களாலேயே நடந்து வந்தது. பருத்தி முதலியவற்ருல் நூற்கப்படுவதும் நூல். கல்வியறிவு முதலிய வற்ருல் இயற்றப்படுவதும் நூல். இவ்வாறு நூல் என்ற சொல்லுக்கு இரு பொருள்கள் அமைந்திருக்கும் நேர்மையை நோக்கும்போது நூல் நூற்கும் தொழிலுக்கு நம் முன்னேர்கள் அளித்திருந்த நுண்மை புலப்படும். இவ்வாறு நம்மவர் ஆடை நெய்து தாம் உடுத்திக் கொண்டதோடு உலகத்திற் பல பகுதிகளுக்கும் அவற்றை ஏற்றுமதி செய்து வந்தனர்.

ஆட்டு ரோமத்தையே கண்டு பருத்திச் செடியே காணுத கிரேக்கர் இந்திய ஆடைகளை வாங்கி மகிழ்ந்தனர். அவர்களுடைய பழைய புத்தகமொன்றிலே காணப்படும் ஒரு செய்தி அக் காலத்தில் அவர்கள் இந்தியப் பருத்தியைப் பற்றிக் கொண்டிருந்த எண்ணத்தைக் காட்டுகிறது. "இந்தியாவிலே ஒருவிதக் கம்பளி மயிர் மரத்தில் காய்க்கிறது. அது ஆட்டு ரோமத்தைவிட நுட்பமானது"; "பருத்தி ஓர் ஆட்டுக் குட்டி: அது சுற்றுப் புறங்களிலுள்ள செடிகளைத் தின்றுவிடும்" என்றும் புத்தங்களில் கண்டிருக்கிறது. இவை 2000 ஆண்டுகளுக்கு முன் எழுந்தவை.

பழங்காலத்தில் இவ்வளவு மேன்மையுடன் விளங்கிய நெய்தல் தொழில் ஐரோப்பியர் இந்திய நாட்டை ஆளத்தொடங்கின வரையில் மிக மேன்மையான முறையில் வளர்ந்து வந்தது. ஔரங்கசீப்

மன்னர் ஒரு முறை தம் மகள் ஆடையற்றவளாக இருந்தாளென்று அவளைக் கடிந்து கொண்டனராம்; ஆனால் அவ்வம்மை அப்பொழுது தன் ஆடையைத் தன் உடலைச் சுற்றி எட்டு முறை கட்டிக் கொண்டிருந்ததாக விடையளித்தனளாம். இவ்வளவு மென்மையுடன் நெய்யப் பெற்ற ஆடைகளை ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன் வரையில் நம் நாட்டினர் உபயோகித்து வந்தனர். அத்தொழிலை ஆங்கிலேயர் வேண்டுமென்றே நசுக்கினர். அதனோடு ஐரோப்பாவில்



நெசவு ஆலை - இராட்டினம்

நீராவி கண்டுபிடிக்கப் பெற்று ஆலைத் தொழில்கள் தொடங்கின. பலபேர் கூடிப் பல நாள் செய்ய வேண்டிய தொழிலை ஓர் இயந்திரம் ஒரு நொடியில் செய்வதாயிற்று. அச்சாதனை பெறாத இந்தியர் மேலை நாட்டு ஆலைத் துணிகளோடு போட்டியிட இயலாமல் தம் தொழிலை இழந்தனர்.

பிறகு மெதுவாக இந்திய முதலாளிகளும் ஆலை களை இந்நாட்டிலேயே நிறுவத் தொடங்கினார்கள். இங்கும் ஆலைகளிலிருந்து துணிகள் வெளிவந்தன. இருந்தாலும் கைத்தொழிலுக்குச் சலுகை இல்லாமலே போயிற்று. நூல் நூற்றுப் பிழைத்து வந்த பல கோடி இந்திய மக்கள் வேலையற்றுப் போயினர்; அதனால் வறுமையும் சோம்பலும் நாட்டில் குடி புகுந்தன.

இக்கொடுமையை நீக்கக் காந்திமகான் கைராட்டி னத்தின் மேன்மையையும் கதராடையின் தூய்மையை யும் இந்திய மக்களுக்குக் காட்டினார். அவருடைய இச் செயலால் நாம் அடைந்த பெருமைகளைச் சொல்ல வியலாது. இன்று நூல் நூற்றல், ஆடை நெய்தல் ஆகிய தொழில்கள் சிறந்த குடிசைத் தொழில்களாக விளங்குகின்றன. அத்தொழில்களின் மேன்மையால் தான் இனி வருங்கால பாரதத்தின் மேன்மையும் துலங்கக்கூடும்.

பயிற்சி :

சொற்கள்

பழமொழி போர்வை உரோமம் நுரை நுண்மை சாதனை
நாகரிகம் நாட கோரை நெய் ஏற்றுமதி ராட்டினம்
தாவரம் நார் பின்னம் நேர்மை நொடி துலங்க
ஆடையணிந்து நாளடைவில் வேலையற்று
வெப்பதட்ப காலங்கள் பெயர்போனது

ஆடை அணிந்தான் என்பதுபோலப் பின் வரும் பெயர்களுக்கு ஏற்ற வினைகளைக் கொடுக்க.

உணவு—
வெற்றிலை—
கிரீடம்—
அணிகலம்—
சட்டை—

வினுக்கள்

1. பல உயிர்ப் பிராணிகள் இயற்கையில் ஆடைகளைப் பெற்றுள்ளன ? இஃது உண்மையா ?

2. மிகப்பழங்காலத்தில் இந்தியா நல்ல ஆடைக்குப் பெயர் போனதாயிருந்தது என்பது எவ்வாறு தெரியும் ?

3. நெய்தல் தொழில் பிற்காலத்தில் நசித்துப் போகக் காரணங்கள் யாவை ?

4. மகாத்மா காந்தி ஆடைத்தொழிலுக்குச் செய்த நன்மை யாது ?

இலக்கணம்

புள்ளிகளும் குறிகளும்.

பின்வரும் பாராவில் உரிய இடங்களில் புள்ளிகளையும் குறிகளையும் இடுக.

அவை. , ; ? ! " "

ஒரு நாள் ஒருத்தி புத்தர் பெருமானை அணுகி ஐயா நான் அருமையாகப் பெற்ற குழந்தை இறந்து போயிற்று அதனை உயிர்ப்பித்துத் தரவேண்டும் என்று கேட்டாள் அதற்கு அவர் உலகத்திற் பிறந்தவர் யாவரும் சாகத் தான் வேண்டும் சாவாதவர் எவரும் இல்லை நீ வருந்திப் பயனில்லை போய் வா என்றார் அதற்கு அவள் எம்பெருமானே நீர் கடவுளல்லவோ உம்மால் ஆகாதது ஏதேனுமுண்டோ என்றாள்

கட்டுரை

உன் ஊரில் ஆண்டொன்றுக்கு எவ்வளவு ரூபா மதிப்புள்ள ஆடைகள் செலவாகின்றன ? அவை எங்கெங்கிருந்து வருகின்றன ? ஆராய்ந்து ஒரு கட்டுரை எழுது.

21. வழிகாட்டி

ஒரு நாடகம்

ஒரு பாலை நில நடுவில் யானை குதிரை முதலிய வற்றுடன் ஒருவர் பல்லக்கில் வருகிறார். ஓர் ஏழைப் புலவர் அவரைச் சந்திக்கிறார். காலம் பிற்பகல்.

புலவர் : தேர், புரவி, யானை முதலிய படைகளுடன் வரும் மன்ன! யான் ஒரு புலவன். தாம் யாரோ? தம்முடைய நாடு ஏதோ?

வந்தவர் : ஐய! என்னை மன்னன் என்றோ மதித்தீர்?

புல : பின்பு யாரென மதிப்பது! மன்னர்க்குரிய குறிகளெல்லாம் உம்மிடம் காணப்பெறுகின்றன.



நால்வகைப் படைகளும் முன்னே நடக்க, பல்லக் கில் வீற்றிருக்கும் தம்மை யான் வேறு எவரென எண்ணுவேன்!

வங் : மன்னவர்க்கு முடியிராதோ?

புல : ஆம் மறந்தேன், தாங்கள் யாரோ?

வங் : ஐய, நாமிருவரும் ஒத்த குடியினரே!

புல : வெகு நன்று. நான் பாணன். என் வற்றிய உடலையும், குழிந்த கண்களையும் கண்டால் என் வறுமையும் எவர்க்கும் புலனாகும். நீரோ பூரித்த உடலும் ஒளி வீசும் கண்களும் கொண்டு விளங்குகிறீர். என் உடலை மூடிக்கொண்டிருக்கும் ஆடையோ இந்திரன் கண்களைப்போல் ஆயிரம் பொத்தல்களுடையதாயிருக்கிறது. உம்முடைய உடலோ பொன்னுடையால் போர்த்தப் பெற்றிருக்கிறது. என் கழுத்தில் தொங்குவதோ ஒரு காசும் பெறாத தாவடம்; நும் மார்பிலோ பொன்னரிமாலை பொலிகின்றது. நாமிருவரும் ஒத்த குடியினராவது எப்படி?

வங் : ஐய! இதோ என் கையிலிருப்பதைக் காணுங்கள்.

புல : (வியப்புடன்) யாழ்!

வங் : ஆம். நானும் ஒரு பாணனே! நேற்று உம்மினும் வறுமையுற்றிருந்தேன்.

புல : பிறகு?

வங் : என் உடல் உம்மிலும் மெலிவுற்றிருந்தது.

புல : உம்...

வங் : என் ஆடையில் தையல் நூலையன்றி ஆடையின் இழையே இல்லாமலிருந்தது.

புல : அவையெல்லாம் என்னவாயின?

வங் : பறந்து போயின.

புல : எனக்கொன்றும் விளங்கவில்லையே ! ஐயா !

வந் : சொல்லுகிறேன், கேளுங்கள். என் நற்காலம் ஒரு வள்ளலை நான் காண உதவியது.

புல : அவர் யாது செய்தார் ?

வந் : நானெப்படிச் சொல்வேன். நான் அவர் அரண்மனை வாயிலிற் சென்றவுடன் வாயில் காவற்காரன் என்னைத் தடை செய்யவில்லை. ஆனல் நான் அங்கேயே நின்றுகொண்டு என் யாழை மீட்டி ஒரு பண் பாடினேன்.

புல : அப்போது !

வந் : அரண்மனையில் உள்ளிருந்து ஒரு குரிசில் வெளியே வந்தான். அவன் தோற்றம் ஆண் சிங்கத்தின் தோற்றமாயிருந்தது. ஆனல் அவன் கண்களில் கருணை ததும்பிற்று. அவன் ஒரு பெண் யானை போல் நடந்து வந்து என் கைகளைத் தன் கைகளாற் பிடித்து என்னை உள்ளே அழைத்துச் சென்முன்; அங்கே எனக்குச் செய்த நன்மைகளை நான் என்ன என்பேன் ! என் கிழிசல் துணிகளை நீக்கிப் பொன்னுடைகளை அணிவித்தான். அமுதம் போன்ற இனிய உணவைப் பொற் கிண்ணங்களில் என் முன் வைத்து என்னை உண்பித்தான் ; இனிய சொற்களைக் கூறினன். பிறகு இவ்வரிசைகளை யெல்லாம் கொடுத்து என்னை விடுத்தான்.

புல : இப்படியும் ஒருவர் இருக்கிருரா ? பழமரத்தை நாடி அலையும் பறவைபோல் திரிகிறேன் ; அப்புண்ணியவான் யாரென்று கூறலாமோ ?

வந் : அவன் **வாணபூபதி** என்ற பெயரையுடையவன். அவன் **சூறைநகர்க்கு** இறைவன். அவ்வூரும் சேய்மையிலில்லை. இந்த வழியே நேராகச் சென்றால் அவ்வூரை இன்று மாலைக்குள் அடையலாம்.

புல : அவன் இல்லத்திற்கு அடையாளமுண்டோ?

வந் : அது எளிய இல்லமன்று. மாடம், மாளிகை, கூடம், கோபுரம் என்ற பகுதிகளையுடையது. அரண்மனை வாயில், ஊரில் நுழைந்த வுடனேயே தோன்றும். அம் மனைவாசலில் ஓர் அத்திமரம், ஒரு வேம்புமரம், ஒரு பனைமரம் நிற்கின்றன. சில அரசுகளும் அங்கே காணலாம். இவையே குறிகள்.

புல : பாணர் பெரும! நும் சொற்களின் பொருள் களை உணர்கிறேன். நீர் கூறியவை மரப் பெயர்கள் அல்ல. ஆத்தி சோழர்க்கு அடை யாளப்பூ; வேம்பு பாண்டியர்க்கு உரியது. பனை சேரரைச் சார்ந்தது. ஆகவே வாணபூபதி வாயிலில் சோழ, பாண்டிய, சேர மன்னர்கள் நிற்பார்கள் என்று அறிகிறேன். அரசும் அத்தி களும் சிற்றரசர்களையும் அவர்களைச் சுமந்து வந்த யானைகளையும் சுட்டுகின்றன. இவ்வாறு பேரர சர்களும் சிற்றரசர்களும் வாயிலில் காத்து நிற்கப் பூபதி வாழ்கிறான் என்பதை அறிந்து கொண்டேன். அவ்வள்ளலை இன்றே போய்க் காண்பேன். என் வறுமை தீர்ப்பேன். ஐய! நும் அன்புடைமையை மறவேன். வணக்கம்.

(இருவரும் போகிறார்கள்)

பயிற்சி:

சொற்கள்

பாலை	முடி	பூரித்த	தாவாடம்	தடை	வரிசை
புரவி	குடி	இந்திரன்	பொன்னரிமாலை	பண்	சேய்மை
படை	பாணன்	பொத்தல்	இழை	குரிசில்	கூடம்

2. எதிர்ச் சொற்கள் கூறுக: அண்மை, உண்மை, அல்ல, நன்மை, வறுமை.

3. இரு பொருள்கள் கூறுக :— அரசு, அத்தி, திரி, இழை, மதி.

கேள்விகள்

(1) நால்வகைப் படைகள் யாவை ?

(2) ஏழைப் புலவன் கோலம் எவ்வாறிருந்தது ?

(3) வந்தவன் தோற்றம் எவ்வாறிருந்தது ?

(4) அவனுக்கு வாணபூபதி செய்த உபசாரங்கள் யாவை ?

(5) பூபதியின் அரண்மனை எவ்வாறிருந்தது ?

(6) மரப் பெயர்களால் மூவேந்தரைக் குறித்தது எங்ஙனம் ?

கட்டுரை

பாணன் தான் கண்ட பாலைவன நிகழ்ச்சியைத் தன் மனைவிக்குக் கூறினன் என்று எண்ணிக்கொண்டு அவன் என்ன கூறியிருப்பான் என்று சொல்லுக.

22. கடிதங்கள்

1

ப. கணபதி
அமைச்சர்
தமிழ் இலக்கியக் கழகம்.

குமர குருபரர் தேவாரக் கல்விச்சாலை,
ஸ்ரீ வைகுண்டம்,
1—9—51.

புகை வண்டி நிலையத் தலைவர் அவர்கள்,
திருநெல்வேலி சந்திப்பு,
திருநெல்வேலி.

ஐயா,

எங்கள் கழக உறுப்பினர் ஐம்பதின்மரும், எங்கள் ஆசிரியர் இருவரும் திருநெல்வேலி வண்டி நிலையத்திலிருந்து நிகழும் செப்டம்பர் மீ 6உ வியாழக்கிழமை சென்னைக்குச் செல்வதாக இருக்கிறோம். அன்று, திருநெல்வேலியிலிருந்து புறப்படும் சென்னைத் தபால் வண்டியில் எங்கள் ஐம்பத்திருவர்க்கும் இடம் ஒதுக்கி வைத்து உதவ வேண்டுகிறேன். அவ்வாறு செய்வதற்கேற்றவாறு வழிச் சீட்டுப் பணமும் கட்டணமும் இக்கடிதம் கொண்டுவருபவரிடம் கொடுத்திருக்கிறேன். அன்புகூர்ந்து உதவுக.

இங்ஙனம்,
தங்கள் அன்பன்,
ப. கணபதி.
அமைச்சர் தமிழ் இலக்கியக் கழகம்.

2

பெ. மாணிக்கம்,
திரு. பெரியசாமி மகன்,
நெசவுத் தொழில்.

50, மாசி வீதி,
மதுரை,
3—9—51.

தலைமை ஆசிரியர்,
கைத்தொழிற் பள்ளிக்கூடம்,
மதுரை.

ஐயா,

தங்கள் பள்ளிக்கூடத்தில் தொழிலாளிகளின் பிள்ளைகளுக்கு இனமாகத் தொழிற் கல்வி கற்றுக் கொடுப்பதாகப் பத்திரிகைகளிற் படித்தேன்.

நான் வழிவழியாக வரும் ஒரு நெசவுத் தொழிலாளியின் மகன். நான் ஐந்தாவது வகுப்புவரையில் படித்திருக்கிறேன். ஓழிந்த வேளைகளில் நான் என் தந்தைக்கு அவருடைய தறித்தொழிலில் உதவுவது உண்டு. நாங்கள் மிக்க வறியவர்களாகையால் பணம் செலவிட்டு என்னைப் படிக்க வைக்க என் தந்தையால் முடியவில்லை.

எனக்கு நல்ல உடல் வலிவும் கைத்திறனும் உண்டு என்பதைத் தங்களுக்குக் காட்ட இரு நற்சாட்சிப் பத்திரங்கள் இதனுடன் அனுப்பியுள்ளேன். தாங்கள் அன்பு கூர்ந்து என்னைத் தங்கள் பள்ளிக்கூடத்தில் சம்பளமில்லாமல் சேர்த்துக்கொள்ள வேண்டுகிறேன்.

தங்கள் பள்ளிக்கூட விதிகளுக்கு எக்காலத்திலும் உள்ளடங்கி நடப்பேனென்றும் என்னல் முடிந்தவரை

யில் உழைத்து நற்பெயரெடுக்க முயல்வேனென்றும் உறுதி கூறுகிறேன்.

இங்ஙனம்,

அடக்கம்-2. தங்கள் பணிவுள்ள,

பெ. மாணிக்கம்.

இவை காரியக் கடிதமும் விண்ணப்பமும் ஆகும். இத்தகைய கடிதங்களில் நட்புக்கோ அன்புக்கோ இடமில்லை. ஆனால் மரியாதை குறையலாகாது. இக் கடிதங்களில் சொல்ல வேண்டியவற்றைச் சுருக்க மாகவும், தெளிவாகவும் முழுமையாகவும் எழுத வேண்டும். எழுதுகிறவர் முகவரி, எழுதும் நாள் முதலியவை தெளிவுபட எழுதவேண்டும்.

பயிற்சி :

பின் வரும் பொருள்களைக் கொண்டு கடிதங்கள் வரைக.

(1) உன் கல்விச்சாலை ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கும்படி ஒரு பெரிய மனிதருக்கு.

(2) ஒரு கடிகாரம் திருட்டுப் போனதாகப் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு.

(3) கேட்டபடி பொருள்களை அனுப்பவில்லையென்று ஒரு கடைக்காரருக்கு.

23. தியாகம்

ஏறக்குறைய ஐம்பதாண்டுகளுக்கு முன்னே அமெரிக்காவில் மஞ்சள் காய்ச்சல் என்ற கொடிய நோயொன்று தோன்றி மக்களை ஆயிரக்கணக்கில் மடியச் செய்து வந்தது. அக்கண்டத்தை யொட்டிய மேற்கு இந்திய தீவுகளுள் ஒன்றான கியூபா என்ற தீவில் அமெரிக்கர்களுக்கும் அத்தீவினர்க்கும் பெரும் போரொன்று நிகழ்ந்தபோது, மடிந்தவர்களைக் காட்டிலும் இந்நோயால் மடிந்தவர்களே அதிகமாயினர்.

அமெரிக்கப் படையில் டாக்டர் ரீட் என்ற மருத்துவ நிபுணரொருவர் இருந்தார். இந்த நோய்க்குக் காரணம் யாது என்று அறிய அவர் அரும்பாடு பட்டார். கொசுகுகளே இதற்குக் காரணமாகு மென்றும், அவை ஒரு நோயாளியைக் கடித்து அவரிடமிருந்து நோயை எல்லோருக்கும் பரப்பிவிடுகின்றன வென்றும் அவர் ஊகித்தார். ஆனால் அது உண்மையா என்று நேரடியாகச் சோதிக்க அவருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.


ஆகவே, அவர் தம் காரியாலயத்தின் முன்பு ஒரு விளம்பரத்தை எழுதினார். அதனில், "மிக மிகக் கொடிய சோதனை ஒன்றிற்கு இரண்டு ஆட்கள் வேண்டும். ஒவ்வொருவருக்கும் முந்நூறு டாலர் இனமாகக் கொடுக்கப்படும்" என்று கண்டிருந்தது.

விளம்பரம் போட்ட ஐந்து நிமிடங்களில் இரண்டு போர்வீரர்கள் அவரை வந்து கண்டுகொண்டனர். அவர்களுள் பின் வருமாறு பேச்சு நடந்தது.

டாக்டர் : நீங்கள் இருவரும் விரும்புவதென்ன?

ஒருவர் : தங்கள் விளம்பரம் கண்டு வந்தோம்.

டாக்டர் : நல்லது. நான் சொல்வதைக் கவனமாய்க் கேளுங்கள். இம்மஞ்சள் நோய் கொசுகுகளால் பரவுகிறதென்ற ஐயமொன்று எனக்கு உண்டாகியிருக்கிறது. அஃது உண்மையென்று சோதனையால் தெரியுமானால் அந்நோயைத் தடுக்க வழி கண்டு பிடித்தாக முடியும். அதனால் பலபேர் சாவதைத் தடுக்கலாம். அதற்காக நோயாளியைக் கடித்த கொசுகுகளை நோயில்லாத இருவர் மீது விடுத்து ஆராயவேண்டும். இவ்வாபத்தான சோதனைக்கு நீங்கள் இணங்குகிறீர்களா?



இருவரும் : ஆம்.

டாக்டர் : நன்றாக ஆராய்ந்து சொல்லுங்கள். உங்களைக் கொசுகுகள் கடித்தவுடன் கடுமையான

காய்ச்சல் உண்டாகும். தாங்கமுடியாத தலைவலி தோன்றும். கருப்பாக வாந்தி செய்வீர்கள். நீங்கள் பிழைப்பீர்களென்பதற்கு உத்தரவாதம் இல்லை.

இருவரும் : நாங்கள் இணங்குகிறோம்.

டாக்டர் : அரசியலார் உங்களில் ஒவ்வொருவருக்கும் முந்நூறு டாலர்கள் அளிப்பார்கள்.

இருவரும் : ஐயா, நாங்கள் பணத்துக்காக வரவில்லை.

டாக்டர் : பணம் வேண்டாமென்று யாரேனும் சொல்வார்களா ?

இருவரும் : நாங்கள் இறப்பதனாலும் உலகம் நன்மை பெறட்டும் என்ற எண்ணத்திற்காக வந்தோமேயன்றி, பண ஆசைகொண்டு நாங்கள் தங்களிடம் வரவில்லை. தயைசெய்து எங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்.

இச்சொற்களைக் கேட்டவுடன் டாக்டர் ரீடுக்கு உண்டான வியப்புக்கும் மகிழ்ச்சிக்கும் அளவேயில்லை. அவர் தம் தொப்பின்மீது கையை உயர்த்தி, "ஐயா நீங்களே சான்றோர்கள்! நீங்களே மனிதர்கள்" என்றார்.

அன்றே அப் போர்வீரர்கள்மீது நோயாளியைக் கடித்த கொசுகுகள் விடப்பட்டன. மருத்துவர் கூறியபடி ஐந்தாவது நாள் அவர்களுக்குக் காய்ச்சல் உண்டாயிற்று. அவர்கள் சிறிதேனும் மனந் தளரவில்லை. கடவுளருளால் அவர்களும் நோயினின்று பிழைத்தெழுந்தனர்.

மஞ்சள் காய்ச்சலின் காரணம் கண்டுபிடிக்கப் பட்டது. கொசுகுகள் உண்டாகும் இடங்களெல்லாம் தூர்க்கப்பட்டன. ஒவ்வொருவரும் கொசுவலை வைத்துக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தப் பட்டனர். மஞ்சள் காய்ச்சல் நாட்டை விட்டே ஓடி விட்டது.

இவ்வாறு அஃது ஓடக் காரணமாயிருந்தவர், அன்று தம் உயிரைக் கொடுக்கத் துணிந்த இரு வீர ஆடவர்களே.

பயிற்சி :

சொற்கள்

கண்டம்	**இணங்கு**	**நோய்**
ஊசி	**சான்றோர்**	**வாந்தி**

வினாக்கள்

1. மஞ்சள் காய்ச்சல் எதனால் உண்டாவது ?
2. நோயாளிகள் எவ்வாறு துன்பப்படுவர் ?
3. போர்வீரர் ஏன் முன் வந்தனர் ?
4. அவர்களுடைய உதவியால் உலகம் பெற்ற நன்மை யாது ?

கட்டுரை

நீங்கள் அருகிலுள்ள ஏதேனும் ஒரு மருத்துவச் சாலையைப் பார்த்து அங்குக் காண்பவற்றை 2 பக்கங் களில் எழுதுக.

24. நாட்டு வாழ்த்து



வாழிய செந்தமிழ் ; வாழ்க நற்றமிழர் ;
வாழிய பாரத மணித்திரு நாடு.
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க ;
நன்மை வந்தெய்துக ; தீதெலாம் நலிக.
அறம் வளர்ந்திடுக ; மறம்மடி வுறுக.
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக.
நந்தே யத்தினர் நாடொறும் உயர்க.
வந்தே மாதரம் ! வந்தே மாதரம் !

—சுப்பிரமணிய பாரதியார்

செய்யுட் பகுதி

1

ஔவையார் அருளிச்செய்த

நல்வழி

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா. 1

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. 2

வருந்தி யழைத்தாலும் வாராதன வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாகி நெடுந்தூரந் தானினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 3

உள்ள தொழிய வொருவர்க் கொருவர்சுகம்
கொள்ளக் கிடையா குவலயத்தில்—வெள்ளக்
கடலோடி மீண்டு கரையேறி னாலென்
உடலோடு வாழு முயிர்க்கு. 4

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வாறு
ஊற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்லகுடிப் பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்?—வேண்டா
நமக்குமது வழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும். 6

ஒருநாளுணவை ஒழியென்று லொழியாய்
இருநாளைக் கேலென்று லேலாய்—ஒரு நாளும்
என்னே வறியா யிடும்பைகூ ரென்வயிறே!
உன்னோடு வாழ்த லரிது. 7

ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 8

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி யிடித்துண்கை—சீச்சீ!
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர்விடுகை சால வுறும். 9

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்—வையத்
தறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கென்று
வெறும்பானை பொங்குமோ மேல். 10

பெற்றோர் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றா ருகந்தா ரெனவேண்டா—மற்றோர்
இரணங் கொடுத்தா லிடுவ ரிடாரே
சரணங் கொடுத்தாலும் தாம். 11

சேவித்துஞ் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழினுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம். 12

நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தருஞ்சிவந்த தாமரை யாடான். 13

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம். 14

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை. 15

ஆன முதலி லதிகஞ் செலவானல்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனா நாடு. 16

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றியது வரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளு மீசன் செயல். 17

உண்பது நாழி யுடுப்பது நான்கு முழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன-கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்தனையுஞ் சஞ்சல மேதான். 18

மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவரு மங்கில்லை—சுரந்தமுதம்
கற்றாதரல் போல் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர். 19

இழுக்குடைய பாட்டிற் கிசை நன்று; சால
ஒழுக்கம் உயர்குலத்தி னன்று;—வழுக்குடைய
வீரத்தி னன்று விடாநோய்; பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்று தனி. 20

ஆறிடு மேடு மடுவு போலாஞ் செல்வம்
மாறிடு மேறிடு மாநிலத்தீர்—சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. 21

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்தின்
பட்டுருவும் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். 22

குறிப்புரை

1. கோலஞ்செய் - அழகைச் செய்கின்ற; துங்கம் - பரிசுத்தமான; கரிமுகத்து - யானை முகத்தை உடைய; தூ - பரிசுத்தமான; மணியே - மணிபோல்பவனே (விநாய

கனே); சங்கத்தார் ஆராய்ந்த தமிழ்; தமிழ் மூன்றும் - தமிழின் மூன்று பகுதிகளாக இயல், இசை, நாடகம் என்ற மூன்றையும்.

2. சாற்றுங்கால் - சொல்லுமிடத்து; நெறி - வழி; மேதினியில் - பூமியில்; பட்டாங்கு - உண்மை நூல்.

3. பொருந்துவன - வரத்தருவன; துஞ்சுவது - இறப்பது.

4. குவலயத்தில் - பூமியில்.

5. ஏற்றவர்க்கு - யாசித்தவருக்கு, நல்கூர்ந்தார் - ஏழையர்; இசைந்து-மனமொப்பி.

7. இடும்பைகூர்-துன்பம் நிறைந்த.

8. பணிக்கு-வேலைக்கு.

9. சால உறும்-மிகவும் பொருந்தும்.

10. எய்த - அடைய; இருநிதியம் - மிகுந்த செல்வம்; வையத்து - பூமியிலே; பாவம் அறும் - பாவம் ஒழிக்கத் தகுந்தது.

11. உகந்தார் - சிநேகிதர்.

12. சிவந்த தாமரையாள் தான் - லக்ஷ்மி.

13. கூடு - உடல். ஆவி - உயிர்.

15. பாதாள மூலி - ஒரு கொடி; சேடன் - பாம்பு. மன்று - நியாய சபையில். ஓரம் - பக்ஷபாதமான வார்த்தைகளை.

18. மண்ணின் கலம் - மண்பானை; சாந்தனையும் - சாகுமளவும்.

19. அமுதம் - பால். கற்று - கன்றையுடைய பசு; கரவாது - ஒளிக்காமல்; உற்றார் - உறவினர்.

20. இழுக்கு - குற்றம். வழக்கு - குற்றம். தாரம்- மனைவி.

21. மாறிடும் ஏறிடும் - மாறும் ஏறும்; உள்நீர்மை - உளத்தின் தன்மை; வீறும் - வளரும்.

22. நெட்டிருப்புப்பாரை - நீண்ட இரும்புப்பாரை; நெக்கு விடா - பிளவுபடாத; பாறை-கற்பறை.

42. தூரை - தாவி.

2

சில பொறுக்கு மணிகள்

தேவாரம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நிழலே. 1

—திருநாவுக்கரசர்.

இனியவை

இனியது கேட்கின் தனிநெடு வேலோய் !
இனிது, இனிது, ஏகாந்தம் இனிது ;
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல் ;
அதனினும் இனிது ஆதியைச் சேர்தல் ;
அதனினும் இனிது அறிவுள் ளோரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே. 2

—ஔவையார்.

இடைச்சி மோரைப் பாடியது

காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நீணிலத்தில்
உற்றதற்பின்
வாரொன்று மெல்லிடையார் ஆய்ச்சியர்கை
வந்ததற்பின்
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும்
பெற்றாயே 3

ஒரு குதிரையைப் பழித்தது

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே யிருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேகம்போம் வாயான் விகடராமன் குதிரை
மாதம் போம் காத வழி. 4

—காளமேகர்.

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்.

—தமிழ்விடு தூது.

குறிப்புரை

1. மாசு இல்-குற்றமில்லாத. வீங்கு - பொங்குகிற. மூசு - ஒலிக்கும். பொய்கை - குளம். இணை அடி - இரு பாதங்கள்.

2. ஏகாந்தம் - தனிமை. ஆதி - கடவுள். நனவு - விழிப்பு.

3. கார் - மேகம். ககனம் - வானம். நீள்நிலம் - நீண்ட நிலம்.

4. இமையோர் - தேவர்.

KAMALA VACHAKAM

STANDARD V

By

Vidwan, R. VISWANATHAN, M.A., B.O.L.
Pandit, S. MUTHURATNA MUDALIAR

VIVEKANANDA PUBLISHING HOUSE
VIJAYAPURAM : : : TIRUVARUR Jn.

Price Annas 0—9—0